# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2012

# மதிப்பீட்டு அறிக்கை

# 33 - வரலாறு

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2012
# மதிப்பீட்டு அறிக்கை

# 33 - வரலாறு

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**வரலாறு**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2012


## நிதி அனுசரணை

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைக்
கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP - WB)

# அறிமுகம்

இலங்கையின் பொதுப் பரீட்சைகளில் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்கே அதிகளவான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் இப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழானது உயர் கல்விக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு மட்டுமன்றி நடுத்தரமட்ட வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பல்கலைக்கழகங்களில் சில பாட நெறிகளுக்கான அடிப்படைத் தகைமைக்கான அளவுகோலாகவும் கொள்ளப்படுகின்றது. இப்பரீட்சையின் நம்பகம், தகுதி, தரம் ஆகியனவே இதற்குக் காரணமாக அமைகின்றன.

இப்பரீட்சையில் உயர் அடைவைப் பெறுவதற்கு மாணவரும் அவர்களது அடைவை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அயராது உழைக்கின்றனர். இவர்களது எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு உதவும் முகமாகவே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், பாடத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விசார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர் ஆகியோருக்கு பயனுடையதாக அமையும். எனவே, இந்த அறிக்கையை அனேகமானோரின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் நூலகத்தில் பேணுவது சிறந்ததாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். பாடக்குறிக்கோள்கள், பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள் இந்தப் பாட வினாப்பத்திரத்தின் அடிப்படையில் பரீட்சார்த்திகளின் அடைவு ஆகியன ஒவ்வொரு வினாவுக்குமென தனித்தனியே பகுதி 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் மரபுரீதியான சோதனைக் கோட்பாடு (Classical testing theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item response theory) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையினால் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உச்ச நம்பகத்தன்மை, தகுதி ஆகியவற்றைக் கொண்டதாகும்.

வரலாறு பாடத்தின் I,II ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி II இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகளினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி III இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள் அத் தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத் தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன பற்றிய வழிகாட்டல் இதன்மூலம் கிடைக்கப்பெறுமென நினைக்கின்றேன்.

இந்த அறிக்கையின் தரத்தை மேம்படுத்தத்தக்க உங்களது ஆலோசனைகள், கருத்துக்கள் ஆகியவற்றை எமக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம். இந்த அறிக்கையைத் தயாரிக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்களுக்கும் வளவாளர்களாகப் பங்கேற்றவர்களுக்கும் தகவல்களை வழங்கிய பிரதம/ மேலதிக பிரதம/ உதவிப் பரீட்சகர்களுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2013 நவம்பர் 11
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | டபிள்யு.எம்.என்.ஜே. புஷ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பு | - | ஜே.ஏ.ஜே.ஆர். ஜயக்கொடி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| தொகுப்பு | - | ஜே.ஏ.ஜே.ஆர். ஜயக்கொடி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | | எஸ்.ஏ.சீ. திசானாயக்கா<br>செயற்றிட்ட அலுவலர் (ஓய்வுநிலை)<br>தேசிய கல்வி நிறுவகம்<br>மஹரகம |
| | | ஆர்.ஏ. சந்திரசிறி<br>ஆசிரியர் ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>மினுவங்கொடை |
| | | ஆர்.பீ. லின்டன் தர்மதாஸ<br>ஆசிரியர் ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>சிலாபம் |
| ஆக்கக் குழு | - | கே.வீ.எஸ். விஜயமாலா<br>ஆசிரியர் ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>களனி |
| | | டீ.ஆர்.எஸ்.எஸ்.எம். குலதுங்க<br>உதவி அதிபர் (முன்னாள் ஆசிரியர் ஆலோசகர்)<br>சாந்த மாரியா கல்லூரி<br>கேகாலை |
| | | எம்.டீ. மல்லிகா இந்திரானி<br>ஆசிரியர் ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>அம்பலாங்கொட |
| மொழி பெயர்ப்பு | - | சோதிநாயகி பாலசுந்தரம்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வுநிலை) |
| கணினிப் பக்க வடிவமைப்பு | | பொ. அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர் |
| | | எஸ். றஹீனா ஹாஷிம்<br>கணினி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


**பகுதி** I **பக்க எண்**

1. **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்**

1.2.1. பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2. பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 2

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதன் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலய அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

1.3 **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் வினாக்களுக்குப் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

**பகுதி** II

2. **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 13

2.1.2 வினாப்பத்திரம் I 14

2.1.3. வினாப்பத்திரம் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 19

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகள் - பாடப்பரப்பிற்கு அமைய 20

2.1.5 வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடைத் தெரிவுக்கான துலங்கலை வழங்குவதில் மாணவர் சதவீதம் 21

2.1.6 வினாத்தாள் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் 22

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 24

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும், முடிவுகளும், ஆலோசனைகளும் 25

2.2.3 II ஆம் வினாப்பத்திரத்திற்கு அளிக்கப்பட்ட விடைகள் தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும் 47

**பகுதி III**

3. **விடையளிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்** 49

3.2 **கற்றல்-கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 50

# பகுதி I

## 1. பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- ★ வரலாற்றின் பரம்பலையும் அதன் போக்கையும் பற்றிய ஆய்வில் ஈடுபடுவார்.
- ★ நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வதற்காக இறந்த காலம் பற்றிய நுண்ணாய்வு அறிவைப் பயன்படுத்துவார்.
- ★ தேசிய பிரச்சினைகளின்போது நடுநிலையாகப் பரிசீலனை செய்து நடவடிக்கைகளை மேற்கொள்வார்.
- ★ வரலாற்றில் சிறப்பிடம் பெற்றவர்களின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.
- ★ தேசியத்தின் தனித்துவத்தை இனங்கண்டு அதனை மதித்து நடப்பார்.
- ★ வரலாற்று அனுபவங்களை நிகழ்கால நன்மைக்காக பயனுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- ★ இலங்கையின் வரலாறு தொடர்பில் பெருமிதத்துடன் செயற்படுவார்.
- ★ ஆய்ந்தறிந்தும் பகுத்தறிந்தும் சிந்திக்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வார்.
- ★ வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அமைவிடங்களை இனம் காணும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.

## 1.2 பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

### 1.2.1 பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 227952 | 5449 | 233401 |
| தமிழ் | 63230 | 10849 | 74079 |
| ஆங்கிலம் | 6765 | 2970 | 9735 |
| மொத்தம் | **297947** | **19268** | **317215** |

**அட்டவணை 1**

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 26555 | 8.91 | 293 | 1.52 | 26848 | 8.46 |
| B | 22578 | 7.58 | 373 | 1.94 | 22951 | 7.24 |
| C | 60142 | 20.19 | 2025 | 10.51 | 62167 | 19.60 |
| S | 85575 | 28.72 | 5879 | 30.51 | 91454 | 28.83 |
| W | 103097 | 34.60 | 10698 | 55.52 | 113795 | 35.87 |
| **மொத்தம்** | **297947** | **100.00** | **19268** | **100.00** | **317215** | **100.00** |

**அட்டவணை 2**

### 1.2.3 மாவட்ட அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 30494 | 5641 | 18.50 | 3462 | 11.35 | 7066 | 23.17 | 7173 | 23.52 | 23342 | 76.55 | 7152 | 23.45 |
| 2. கம்பஹா | 25724 | 2899 | 11.27 | 2428 | 9.44 | 5459 | 21.22 | 6851 | 26.63 | 17637 | 68.56 | 8087 | 31.44 |
| 3. களுத்துறை | 14646 | 1764 | 12.04 | 1419 | 9.69 | 3256 | 22.23 | 3790 | 25.88 | 10229 | 69.84 | 4417 | 30.16 |
| 4. கண்டி | 19291 | 2044 | 10.60 | 1554 | 8.06 | 4082 | 21.16 | 5140 | 26.64 | 12820 | 66.46 | 6471 | 33.54 |
| 5. மாத்தளை | 6424 | 472 | 7.35 | 425 | 6.62 | 1327 | 20.66 | 1809 | 28.16 | 4033 | 62.78 | 2391 | 37.22 |
| 6. நுவரெலியா | 9145 | 436 | 4.77 | 514 | 5.62 | 1753 | 19.17 | 2619 | 28.64 | 5322 | 58.20 | 3823 | 41.80 |
| 7. காலி | 15058 | 1704 | 11.32 | 1316 | 8.74 | 3467 | 23.02 | 4142 | 27.51 | 10629 | 70.59 | 4429 | 29.41 |
| 8. மாத்தறை | 11347 | 1374 | 12.11 | 1042 | 9.18 | 2515 | 22.16 | 3058 | 26.95 | 7989 | 70.41 | 3358 | 29.59 |
| 9. அம்பாந்தோட்டை | 8735 | 685 | 7.84 | 765 | 8.76 | 1984 | 22.71 | 2541 | 29.09 | 5975 | 68.40 | 2760 | 31.60 |
| 10. யாழ்ப்பாணம் | 8471 | 760 | 8.97 | 697 | 8.23 | 1803 | 21.28 | 1940 | 22.90 | 5200 | 61.39 | 3271 | 38.61 |
| 11. கிளிநொச்சி | 1699 | 46 | 2.71 | 82 | 4.83 | 255 | 15.01 | 377 | 22.19 | 760 | 44.73 | 939 | 55.27 |
| 12. மன்னார் | 1480 | 75 | 5.07 | 125 | 8.45 | 352 | 23.78 | 448 | 30.27 | 1000 | 67.57 | 480 | 32.43 |
| 13. வவுனியா | 2663 | 239 | 8.97 | 222 | 8.34 | 605 | 22.72 | 750 | 28.16 | 1816 | 68.19 | 847 | 31.81 |
| 14. முல்லைத்தீவு | 1405 | 36 | 2.56 | 41 | 2.92 | 194 | 13.81 | 343 | 24.41 | 614 | 43.70 | 791 | 56.30 |
| 15. மட்டக்களப்பு | 6637 | 530 | 7.99 | 475 | 7.16 | 1434 | 21.61 | 1956 | 29.47 | 4395 | 66.22 | 2242 | 33.78 |
| 16. அம்பாறை | 8832 | 470 | 5.32 | 578 | 6.54 | 1768 | 20.02 | 2807 | 31.78 | 5623 | 63.67 | 3209 | 36.33 |
| 17. திருகோணமலை | 5236 | 296 | 5.65 | 359 | 6.86 | 1007 | 19.23 | 1621 | 30.96 | 3283 | 62.70 | 1953 | 37.30 |
| 18. குருநாகல் | 21505 | 1917 | 8.91 | 1831 | 8.51 | 4752 | 22.10 | 6157 | 28.63 | 14657 | 68.16 | 6848 | 31.84 |
| 19. புத்தளம் | 9418 | 705 | 7.49 | 638 | 6.77 | 1854 | 19.69 | 2774 | 29.45 | 5971 | 63.40 | 3447 | 36.60 |
| 20. அனுராதபுரம் | 11703 | 863 | 7.37 | 822 | 7.02 | 2505 | 21.40 | 3547 | 30.31 | 7737 | 66.11 | 3966 | 33.89 |
| 21. பொலன்னறுவை | 5062 | 283 | 5.59 | 312 | 6.16 | 929 | 18.35 | 1474 | 29.12 | 2998 | 59.23 | 2064 | 40.77 |
| 22. பதுளை | 12476 | 732 | 5.87 | 868 | 6.96 | 2513 | 20.14 | 3797 | 30.43 | 7910 | 63.40 | 4566 | 36.60 |
| 23. மொனராகலை | 6535 | 306 | 4.68 | 331 | 5.07 | 1181 | 18.07 | 1939 | 29.67 | 3757 | 57.49 | 2778 | 42.51 |
| 24. இரத்தினபுரி | 14161 | 1224 | 8.64 | 1086 | 7.67 | 2974 | 21.00 | 3956 | 27.94 | 9240 | 65.25 | 4921 | 34.75 |
| 25. கேகாலை | 10821 | 1013 | 9.36 | 997 | 9.21 | 2512 | 23.21 | 3197 | 29.54 | 7719 | 71.33 | 3102 | 28.67 |
| **மொத்தம்** | **268968** | **26514** | **9.86** | **22389** | **8.32** | **57547** | **21.40** | **74206** | **27.59** | **180656** | **67.17** | **88312** | **32.83** |

**அட்டவணை 3**

### 1.2.4 கல்வி வலய அடிப்படையில் முதன் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 14280 | 3461 | 24.24 | 1808 | 12.66 | 3206 | 22.45 | 2700 | 18.91 | 11175 | 78.26 | 3105 | 21.74 |
| 2. ஹோமாகம | 3566 | 351 | 9.84 | 312 | 8.75 | 793 | 22.24 | 1041 | 29.19 | 2497 | 70.02 | 1069 | 29.98 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 6897 | 1032 | 14.96 | 776 | 11.25 | 1622 | 23.52 | 1863 | 27.01 | 5293 | 76.74 | 1604 | 23.26 |
| 4. பிலியந்தல | 5751 | 797 | 13.86 | 566 | 9.84 | 1445 | 25.13 | 1569 | 27.28 | 4377 | 76.11 | 1374 | 23.89 |
| 5. கம்பஹா | 7402 | 1360 | 18.37 | 828 | 11.19 | 1564 | 21.13 | 1725 | 23.30 | 5477 | 73.99 | 1925 | 26.01 |
| 6 மினுவாங்கொட | 4886 | 343 | 7.02 | 411 | 8.41 | 1009 | 20.65 | 1362 | 27.88 | 3125 | 63.96 | 1761 | 36.04 |
| 7. நீர்கொழும்பு | 6803 | 596 | 8.76 | 609 | 8.95 | 1436 | 21.11 | 1868 | 27.46 | 4509 | 66.28 | 2294 | 33.72 |
| 8. களனி | 6633 | 600 | 9.05 | 580 | 8.74 | 1450 | 21.86 | 1896 | 28.58 | 4526 | 68.23 | 2107 | 31.77 |
| 9. களுத்துறை | 7140 | 881 | 12.34 | 637 | 8.92 | 1625 | 22.76 | 1885 | 26.40 | 5028 | 70.42 | 2112 | 29.58 |
| 10. மத்துகம | 3029 | 339 | 11.19 | 335 | 11.06 | 661 | 21.82 | 829 | 27.37 | 2164 | 71.44 | 865 | 28.56 |
| 11. ஹொரணை | 4477 | 544 | 12.15 | 447 | 9.98 | 970 | 21.67 | 1076 | 24.03 | 3037 | 67.84 | 1440 | 32.16 |
| 12. கண்டி | 6999 | 1486 | 21.23 | 877 | 12.53 | 1761 | 25.16 | 1535 | 21.93 | 5659 | 80.85 | 1340 | 19.15 |
| 13. தெனுவர | 2026 | 87 | 4.29 | 133 | 6.56 | 369 | 18.21 | 591 | 29.17 | 1180 | 58.24 | 846 | 41.76 |
| 14. கம்பளை | 3372 | 146 | 4.33 | 159 | 4.72 | 617 | 18.30 | 947 | 28.08 | 1869 | 55.43 | 1503 | 44.57 |
| 15. தெல்தெனியா | 1637 | 48 | 2.93 | 61 | 3.73 | 227 | 13.87 | 512 | 31.28 | 848 | 51.80 | 789 | 48.20 |
| 16. வத்தேகம | 2317 | 111 | 4.79 | 145 | 6.26 | 508 | 21.92 | 651 | 28.10 | 1415 | 61.07 | 902 | 38.93 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 2940 | 166 | 5.65 | 179 | 6.09 | 600 | 20.41 | 904 | 30.75 | 1849 | 62.89 | 1091 | 37.11 |
| 18. மாத்தளை | 3426 | 362 | 10.57 | 293 | 8.55 | 775 | 22.62 | 927 | 27.06 | 2357 | 68.80 | 1069 | 31.20 |
| 19. கலேவெவ | 2019 | 71 | 3.52 | 95 | 4.71 | 366 | 18.13 | 614 | 30.41 | 1146 | 56.76 | 873 | 43.24 |
| 20. நாஉல | 467 | 22 | 4.71 | 19 | 4.07 | 100 | 21.41 | 119 | 25.48 | 260 | 55.67 | 207 | 44.33 |
| 21. வில்கமுவ | 512 | 17 | 3.32 | 18 | 3.52 | 86 | 16.80 | 149 | 29.10 | 270 | 52.73 | 242 | 47.27 |
| 22. நுவரெலியா | 2494 | 60 | 2.41 | 86 | 3.45 | 451 | 18.08 | 758 | 30.39 | 1355 | 54.33 | 1139 | 45.67 |
| 23. கொத்மலை | 1240 | 76 | 6.13 | 67 | 5.40 | 250 | 20.16 | 358 | 28.87 | 751 | 60.56 | 489 | 39.44 |
| 24. ஹட்டன் | 2579 | 111 | 4.30 | 176 | 6.82 | 538 | 20.86 | 715 | 27.72 | 1540 | 59.71 | 1039 | 40.29 |
| 25. வலப்பனை | 1283 | 67 | 5.22 | 77 | 6.00 | 250 | 19.49 | 356 | 27.75 | 750 | 58.46 | 533 | 41.54 |
| 26. ஹங்குரன்கெத்த | 1549 | 122 | 7.88 | 108 | 6.97 | 264 | 17.04 | 432 | 27.89 | 926 | 59.78 | 623 | 40.22 |
| 27. காலி | 6839 | 1074 | 15.70 | 693 | 10.13 | 1586 | 23.19 | 1746 | 25.53 | 5099 | 74.56 | 1740 | 25.44 |
| 28. எல்பிட்டிய | 3077 | 180 | 5.85 | 221 | 7.18 | 709 | 23.04 | 922 | 29.96 | 2032 | 66.04 | 1045 | 33.96 |
| 29. அம்பலாங்கொடை | 3416 | 327 | 9.57 | 299 | 8.75 | 817 | 23.92 | 959 | 28.07 | 2402 | 70.32 | 1014 | 29.68 |
| 30. உடுகம | 1726 | 123 | 7.13 | 103 | 5.97 | 355 | 20.57 | 515 | 29.84 | 1096 | 63.50 | 630 | 36.50 |
| 31. மாத்தறை | 5010 | 915 | 18.26 | 527 | 10.52 | 1155 | 23.05 | 1221 | 24.37 | 3818 | 76.21 | 1192 | 23.79 |
| 32. அக்குரஸ்ஸ | 1998 | 208 | 10.41 | 207 | 10.36 | 423 | 21.17 | 528 | 26.43 | 1366 | 68.37 | 632 | 31.63 |
| 33. முலடியன-ஹக்மன | 2098 | 149 | 7.10 | 187 | 8.91 | 496 | 23.64 | 653 | 31.12 | 1485 | 70.78 | 613 | 29.22 |
| 34. மொறவக்க-தெனியாய | 2241 | 102 | 4.55 | 121 | 5.40 | 441 | 19.68 | 656 | 29.27 | 1320 | 58.90 | 921 | 41.10 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 35. தங்கல்லை | 2444 | 186 | 7.61 | 235 | 9.62 | 602 | 24.63 | 723 | 29.58 | 1746 | 71.44 | 698 | 28.56 |
| 36. அம்பாந்தோட்டை | 3799 | 203 | 5.34 | 250 | 6.58 | 790 | 20.79 | 1160 | 30.53 | 2403 | 63.25 | 1396 | 36.75 |
| 37. வலஸ்முல்லை | 2492 | 296 | 11.88 | 280 | 11.24 | 592 | 23.76 | 658 | 26.40 | 1826 | 73.27 | 666 | 26.73 |
| 38. யாழ்ப்பாணம் | 3094 | 398 | 12.86 | 319 | 10.31 | 707 | 22.85 | 657 | 21.23 | 2081 | 67.26 | 1013 | 32.74 |
| 39. தீவகம் | 578 | 13 | 2.25 | 23 | 3.98 | 77 | 13.32 | 130 | 22.49 | 243 | 42.04 | 335 | 57.96 |
| 40. தென்மராட்சி | 963 | 49 | 5.09 | 75 | 7.79 | 192 | 19.94 | 226 | 23.47 | 542 | 56.28 | 421 | 43.72 |
| 41. வலிகாமம் | 2248 | 137 | 6.09 | 140 | 6.23 | 473 | 21.04 | 569 | 25.31 | 1319 | 58.67 | 929 | 41.33 |
| 42. வடமராட்சி | 1588 | 163 | 10.26 | 140 | 8.82 | 354 | 22.29 | 358 | 22.54 | 1015 | 63.92 | 573 | 36.08 |
| 43. கிளிநொச்சி | 1699 | 46 | 2.71 | 82 | 4.83 | 255 | 15.01 | 377 | 22.19 | 760 | 44.73 | 939 | 55.27 |
| 44. மன்னார் | 1213 | 71 | 5.85 | 117 | 9.65 | 307 | 25.31 | 356 | 29.35 | 851 | 70.16 | 362 | 29.84 |
| 45. மடு | 267 | 4 | 1.50 | 8 | 3.00 | 45 | 16.85 | 92 | 34.46 | 149 | 55.81 | 118 | 44.19 |
| 46. வவுனியா - தெற்கு | 2093 | 219 | 10.46 | 184 | 8.79 | 492 | 23.51 | 565 | 26.99 | 1460 | 69.76 | 633 | 30.24 |
| 47. வவுனியா - வடக்கு | 570 | 20 | 3.51 | 38 | 6.67 | 113 | 19.82 | 185 | 32.46 | 356 | 62.46 | 214 | 37.54 |
| 48. முல்லைத்தீவு | 912 | 28 | 3.07 | 25 | 2.74 | 128 | 14.04 | 211 | 23.14 | 392 | 42.98 | 520 | 57.02 |
| 49. துணுக்காய் | 493 | 8 | 1.62 | 16 | 3.25 | 66 | 13.39 | 132 | 26.77 | 222 | 45.03 | 271 | 54.97 |
| 50. மட்டக்களப்பு | 2141 | 225 | 10.51 | 166 | 7.75 | 470 | 21.95 | 568 | 26.53 | 1429 | 66.74 | 712 | 33.26 |
| 51. கல்குடா | 1145 | 32 | 2.79 | 48 | 4.19 | 196 | 17.12 | 370 | 32.31 | 646 | 56.42 | 499 | 43.58 |
| 52. பட்டிருப்பு | 1346 | 70 | 5.20 | 82 | 6.09 | 267 | 19.84 | 375 | 27.86 | 794 | 58.99 | 552 | 41.01 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 1336 | 196 | 14.67 | 161 | 12.05 | 410 | 30.69 | 406 | 30.39 | 1173 | 87.80 | 163 | 12.20 |
| 54. மட்டக்களப்பு -மேற்கு | 669 | 7 | 1.05 | 18 | 2.69 | 91 | 13.60 | 237 | 35.43 | 353 | 52.77 | 316 | 47.23 |
| 55. அம்பாறை | 2230 | 119 | 5.34 | 152 | 6.82 | 526 | 23.59 | 757 | 33.95 | 1554 | 69.69 | 676 | 30.31 |
| 56. கல்முனை | 2149 | 178 | 8.28 | 192 | 8.93 | 454 | 21.13 | 638 | 29.69 | 1462 | 68.03 | 687 | 31.97 |
| 57. சம்மாந்துறை | 1150 | 38 | 3.30 | 47 | 4.09 | 190 | 16.52 | 327 | 28.43 | 602 | 52.35 | 548 | 47.65 |
| 58. மஹாஓய | 583 | 11 | 1.89 | 25 | 4.29 | 100 | 17.15 | 198 | 33.96 | 334 | 57.29 | 249 | 42.71 |
| 59. தெஹியத்தகண்டிய | 1010 | 61 | 6.04 | 65 | 6.44 | 188 | 18.61 | 310 | 30.69 | 624 | 61.78 | 386 | 38.22 |
| 60. அக்கரைப்பற்று | 988 | 39 | 3.95 | 58 | 5.87 | 192 | 19.43 | 360 | 36.44 | 649 | 65.69 | 339 | 34.31 |
| 61. திருக்கோவில் | 722 | 24 | 3.32 | 39 | 5.40 | 118 | 16.34 | 217 | 30.06 | 398 | 55.12 | 324 | 44.88 |
| 62. திருகோணமலை | 1813 | 178 | 9.82 | 161 | 8.88 | 389 | 21.46 | 518 | 28.57 | 1246 | 68.73 | 567 | 31.27 |
| 63. மூதூர் | 1074 | 54 | 5.03 | 63 | 5.87 | 175 | 16.29 | 326 | 30.35 | 618 | 57.54 | 456 | 42.46 |
| 64. கந்தளாய் | 849 | 23 | 2.71 | 59 | 6.95 | 178 | 20.97 | 282 | 33.22 | 542 | 63.84 | 307 | 36.16 |
| 65. கிண்ணியா | 1014 | 34 | 3.35 | 56 | 5.52 | 203 | 20.02 | 341 | 33.63 | 634 | 62.52 | 380 | 37.48 |
| 66. திருகோணமலை-வடக்கு | 486 | 7 | 1.44 | 20 | 4.12 | 62 | 12.76 | 154 | 31.69 | 243 | 50.00 | 243 | 50.00 |
| 67. குருநாகல் | 5331 | 651 | 12.21 | 531 | 9.96 | 1190 | 22.32 | 1436 | 26.94 | 3808 | 71.43 | 1523 | 28.57 |
| 68. குளியாப்பிட்டிய | 3723 | 417 | 11.20 | 325 | 8.73 | 866 | 23.26 | 1040 | 27.93 | 2648 | 71.13 | 1075 | 28.87 |
| 69 நிக்கவெரட்டிய | 2785 | 180 | 6.46 | 235 | 8.44 | 654 | 23.48 | 850 | 30.52 | 1919 | 68.90 | 866 | 31.10 |
| 70. மாகோ | 3259 | 167 | 5.12 | 198 | 6.08 | 638 | 19.58 | 1039 | 31.88 | 2042 | 62.66 | 1217 | 37.34 |
| 71. கிரியுள்ள | 3626 | 256 | 7.06 | 307 | 8.47 | 859 | 23.69 | 1007 | 27.77 | 2429 | 66.99 | 1197 | 33.01 |
| 72. இப்பாகமுவ | 2781 | 246 | 8.85 | 235 | 8.45 | 545 | 19.60 | 785 | 28.23 | 1811 | 65.12 | 970 | 34.88 |
| 73. புத்தளம் | 4493 | 205 | 4.56 | 222 | 4.94 | 785 | 17.47 | 1400 | 31.16 | 2612 | 58.13 | 1881 | 41.87 |
| 74. சிலாபம் | 4925 | 500 | 10.15 | 416 | 8.45 | 1069 | 21.71 | 1374 | 27.90 | 3359 | 68.20 | 1566 | 31.80 |

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 75. அனுராதபுரம் | 4170 | 506 | 12.13 | 394 | 9.45 | 983 | 23.57 | 1100 | 26.38 | 2983 | 71.53 | 1187 | 28.47 |
| 76. தம்புத்தேகம | 1972 | 81 | 4.11 | 130 | 6.59 | 398 | 20.18 | 646 | 32.76 | 1255 | 63.64 | 717 | 36.36 |
| 77. கெக்கிராவ | 2271 | 159 | 7.00 | 148 | 6.52 | 505 | 22.24 | 717 | 31.57 | 1529 | 67.33 | 742 | 32.67 |
| 78. கலென்பின்துனுவெவ | 1565 | 54 | 3.45 | 72 | 4.60 | 307 | 19.62 | 527 | 33.67 | 960 | 61.34 | 605 | 38.66 |
| 79. கெபித்திகொல்லாவ | 1725 | 63 | 3.65 | 78 | 4.52 | 312 | 18.09 | 557 | 32.29 | 1010 | 58.55 | 715 | 41.45 |
| 80. பொலன்னறுவ | 1572 | 122 | 7.76 | 112 | 7.12 | 313 | 19.91 | 433 | 27.54 | 980 | 62.34 | 592 | 37.66 |
| 81. ஹிங்குரக்கொடை | 2051 | 121 | 5.90 | 134 | 6.53 | 372 | 18.14 | 555 | 27.06 | 1182 | 57.63 | 869 | 42.37 |
| 82. திம்புலாகல | 1439 | 40 | 2.78 | 66 | 4.59 | 244 | 16.96 | 486 | 33.77 | 836 | 58.10 | 603 | 41.90 |
| 83. பதுளை | 3576 | 258 | 7.21 | 275 | 7.69 | 733 | 20.50 | 1081 | 30.23 | 2347 | 65.63 | 1229 | 34.37 |
| 84. பண்டாரவளை | 3210 | 282 | 8.79 | 266 | 8.29 | 733 | 22.83 | 945 | 29.44 | 2226 | 69.35 | 984 | 30.65 |
| 85. மஹியங்கனை | 2003 | 80 | 3.99 | 110 | 5.49 | 337 | 16.82 | 625 | 31.20 | 1152 | 57.51 | 851 | 42.49 |
| 86. வெலிமடை | 2663 | 84 | 3.15 | 156 | 5.86 | 522 | 19.60 | 855 | 32.11 | 1617 | 60.72 | 1046 | 39.28 |
| 87. பசறை | 1024 | 28 | 2.73 | 61 | 5.96 | 188 | 18.36 | 291 | 28.42 | 568 | 55.47 | 456 | 44.53 |
| 88. மொனராகலை | 2181 | 108 | 4.95 | 111 | 5.09 | 396 | 18.16 | 637 | 29.21 | 1252 | 57.40 | 929 | 42.60 |
| 89. வெல்லவாய | 2804 | 105 | 3.74 | 141 | 5.03 | 501 | 17.87 | 847 | 30.21 | 1594 | 56.85 | 1210 | 43.15 |
| 90. பிபிலை | 1550 | 93 | 6.00 | 79 | 5.10 | 284 | 18.32 | 455 | 29.35 | 911 | 58.77 | 639 | 41.23 |
| 91. இரத்தினபுரி | 5969 | 749 | 12.55 | 549 | 9.20 | 1323 | 22.16 | 1487 | 24.91 | 4108 | 68.82 | 1861 | 31.18 |
| 92. பலாங்கொடை | 2563 | 190 | 7.41 | 203 | 7.92 | 520 | 20.29 | 710 | 27.70 | 1623 | 63.32 | 940 | 36.68 |
| 93. நிவித்திகல | 2285 | 77 | 3.37 | 122 | 5.34 | 485 | 21.23 | 747 | 32.69 | 1431 | 62.63 | 854 | 37.37 |
| 94. எம்பிலிபிடிய | 3344 | 208 | 6.22 | 212 | 6.34 | 646 | 19.32 | 1012 | 30.26 | 2078 | 62.14 | 1266 | 37.86 |
| 95. கேகாலை | 4179 | 562 | 13.45 | 468 | 11.20 | 999 | 23.91 | 1177 | 28.16 | 3206 | 76.72 | 973 | 23.28 |
| 96. மாவனல்லை | 3373 | 240 | 7.12 | 272 | 8.06 | 789 | 23.39 | 983 | 29.14 | 2284 | 67.71 | 1089 | 32.29 |
| 97. தெஹிஓவிட்ட | 3269 | 211 | 6.45 | 257 | 7.86 | 724 | 22.15 | 1037 | 31.72 | 2229 | 68.19 | 1040 | 31.81 |
| மொத்தம் | 268968 | 26514 | 9.86 | 22389 | 8.32 | 57547 | 21.40 | 74206 | 27.59 | 180656 | 67.17 | 88312 | 32.83 |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 1020 | 0.32 | 317215 | 100.00 |
| 81 - 90 | 9279 | 2.92 | 316195 | 99.68 |
| 71 - 80 | 18834 | 5.93 | 306916 | 96.75 |
| 61 - 70 | 24921 | 7.85 | 288082 | 90.82 |
| 51 - 60 | 36263 | 11.43 | 263161 | 82.96 |
| 41 - 50 | 48746 | 15.36 | 226898 | 71.53 |
| 31 - 40 | 70890 | 22.34 | 178152 | 56.16 |
| 21 - 30 | 71873 | 22.65 | 107262 | 33.81 |
| 11 - 20 | 32941 | 10.38 | 35389 | 11.16 |
| 01 - 10 | 2431 | 0.76 | 2448 | 0.77 |
| 00 - 00 | 17 | 0.05 | 17 | 0.01 |

**அட்டவணை 5**

**மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.**

உதாரணம் : (31 - 40 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையைக் கருதுவோம்.)
இப்பாடத்தில் 31 - 40 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 70890 பேர் உள்ளனர். இது 22.34% ஆகும். 40 புள்ளிகளுக்குக் குறைவாக எடுத்த மாணவர்கள் 178152 பேர் உள்ளனர். இது 56.16% ஆகும்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் 1 இல் பெறப்பட்டுள்ள அடைவு




**வரைபு** 1

இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.
இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும்முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - இங்கு 25 ஆம் இலக்க வினாவுக்கே அதிக எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். இதன் இலகுதன்மை 74% ஆகும். 18ஆம் இலக்க வினாவிற்கு மிகக் குறைந்த எண்ணிக்கையான பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர். இதன் இலகுதன்மை 12% ஆகும்.

## 1.3.2 வினாப்பத்திரம் II - வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம்




மேற்படி வரைபின் மூலம் தகவல் பெறும் விதம் பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் - இங்கு 1 ஆம் இலக்க வினா கட்டாய வினாவாக இருந்தபோதும் சிறு தொகையினர் இவ்வினாவைத் தெரிவு செய்யவில்லை. இவ்வினாவுக்கு விடையளித்தோர் 99% ஆகும். 10 ஆம் வினாவை 32% தினர் மாத்திரமே தெரிவு செய்துள்ளனர்.

**வரைபு 2** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் -

இங்கு 1 ஆம் இலக்க வினாவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் 30 ஆகும். அப்புள்ளிகளுள் 76-100% வகுப்பாயிடையில் அதாவது அதாவது 3% ஆனோர் 23-30 இற்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வாறே அவ்வினாவுக்கான புள்ளிகளில் வகுப்பாயிடை 0-25% க்கு இடையில் அதாவது 39% ஆனோர் 0 - 7 இற்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 3** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு




**வரைபு 4.1** இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும்முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - 1 ஆம் இலக்க வினாவின் (ஆ) (i) A உபபகுதியின் இலகுதன்மை 88% ஆகக் காணப்பட, இவ்வினாவின் (ஆ) (ii) 4 ஆம் பகுதியின் இலகுதன்மை 15% மாத்திரம் ஆகும்.


க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2012
33 - வரலாறு
வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்குரிய ஒவ்வொரு பகுதிக்குமான இலகுச்சுட்டி
இலகுச்சுட்டி
1.0
0.9
0.8
0.7
0.6
0.5
0.4
0.3
0.2
0.1
0.0
A B C D E F G A B C A B C D A B C A B A B A B C D A B C
(i) (ii) (iii) (iv) (i) (ii) (ii) (iv) (i) (ii) (iii) (iv) (i) (ii) (iii) (iv) (i) (ii) (iii) (iv)
2 3 4 5 6
பகுதி II இன் வினாவின் பகுதிகளும் உப பகுதிகளும் - இலங்கை வரலாறு

வரைபு 4.2

## க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2012
### 33 - வரலாறு
### வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்குரிய ஒவ்வொரு பகுதிக்குமான இலகுச்சுட்டி




வரைபு 4.3

## பகுதி II

# 2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்லும்

## 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்களும்

### 2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு

நேரம் : 1 மணித்தியாலம். மொத்தப்புள்ளிகள் 40

✶ நான்கு விடைத் தெரிவுகளைக்கொண்ட 40 பல்தேர்வு வினாக்கள் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்ட (1), (2), (3), (4) விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

✶ முழுப் பாடப்பரப்பையும் உள்ளடக்கி வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

✶ எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

## 2.1.2 வினாப்பத்திரம் I

1. "நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான சாதனமாகவே கடந்த காலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்". வரலாறு படிப்பதைப் பற்றிய பயன்களைக் குறிப்பிடும் இக்கூற்றினை மேல்வருவோருள் எவர் குறிப்பிட்டார் ?
   (1) G. M. ற்றெவெலியன் (2) ஸ்ரீ ஜவர்லால் நேரு
   (3) E. H. கார் (4) அரிஸ்ரோற்றல்

2. மேல்வருவோருள் புராதன இலங்கையைப் பற்றி மிகவும் ஆதாரபூர்வமான செய்திகளைக் குறிப்பிட்ட வெளிநாட்டவர் யார் ?
   (1) மெகஸ்தினிஸ் (2) பிளினி
   (3) இபன்பதூதா (4) குளோடியஸ் தொலமி

3. "வரலாற்று ஆதாரம் என்ற வகையில் இலங்கை வரலாற்றைப் படித்துக்கொள்வதிற் சாசனங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன". மேல்வருவனவற்றுள் இக்கூற்றுடன் **பொருந்தாதது** எது ?
   (1) கல்வெட்டுகள் மூலம் இலங்கையின் தொடர்ச்சியான அரசியல் வரலாற்றை உருவாக்கலாம்.
   (2) இலக்கிய மூலாதாரங்களிற் காணப்படும் செய்திகள் சாசனங்கள் மூலம் உறுதியாகின்றன.
   (3) சாசனங்கள் குறிப்பிடும் விபரங்கள் அவை எழுதப்பட்ட காலத்துக்குரியவை.
   (4) இலங்கையில் வாணிபம், நீதிபரிபாலன நடவடிக்கைகள் என்பன பற்றிய செய்திகள் சாசனங்களிற் காணப்படும்.

4. மேல்வருவனவற்றுள் எவை துட்டகாமினி அரசனின் பத்து மகாபலசாலிகள் பற்றிக் குறிப்பிடும் சாசனங்களைக் கொண்ட தலங்களாகும் ?
   (1) கடலாதெனிய, மிகிந்தலை (2) சிதுல்பவ்வ, சங்கபால விகாரை
   (3) தோணிகல, வெஸ்ஸகிரி (4) நிற்றிகல, கொடவாய

5. இந்தியாவிலே குடியிருப்புகளை ஏற்படுத்திய ஆரம்பகால ஆரியர்களின் நிர்வாக முறையிலுள்ள சிறப்பியல்பு
   (1) அவர்கள் பல ஜனக்குழுக்களாக இருந்தமை
   (2) இயற்கையினை தெய்வீகமயப்படுத்தியமை
   (3) விவசாயத்திற்கு முதன்மை வழங்கியமை
   (4) இராணுவ அல்லது படைபலம் கொண்டு நிருவாகம் செய்தமை

6. விஜயநகரப் பேரரசின் அரசர்கள் ஈட்டிய மிக முக்கியமான சாதனை
   (1) தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவு அளித்தமை
   (2) இந்துக் கட்டிடக் கலையினை உன்னத நிலைக்கு வளர்ச்சி பெறச் செய்தமை
   (3) இஸ்லாமிய வாஃமனி அரசுடன் நீண்டகாலப் போர் புரிந்தமை
   (4) முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து தென்னிந்திய இந்துப் பண்பாட்டைக் காப்பாற்றியமை

7. வடமேற்கு இந்தியாவுக்கு வந்த ஆதி முஸ்லிம்களின் பிரதானமான குறிக்கோள்
   (1) இந்தியாவிலே செல்வங்களைச் சூறையாடிக்கொண்டு தமது தாயகத்திற்குத் திரும்பிச் செல்லுவது
   (2) தமது சமயத்தைப் பரப்புவது
   (3) அங்கு குடியேற்றங்களை ஏற்படுத்துவது
   (4) ஒரு பேரரசினை உருவாக்குவது

8. சீகிரிய நகரத்தொகுதியில் காணப்படக்கூடிய மிகுந்த சிறப்பான அம்சம்
   (1) நகரத்தின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தியமை
   (2) நகரின் உட்புறத்திலே சமய நிறுவனங்களுக்கு இடங்களை ஒதுக்கியமை
   (3) சுற்றாடற் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நகர அமைப்பினைத் திட்டமிட்டமை
   (4) கலைப்படைப்புகளுக்கு முன்னுரிமை வழங்கியமை

9. அனுராதபுரக் காலத்தில் காணப்பட்ட சில பதவிப்பெயர்கள் I வது நிரலில் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய பணிகள் II வது நிரலிலுள்ளன. முதலாவது நிரலையும் இரண்டாவது நிரலையும் ஒப்பிட்டு சரியான விடையைத் தெரிவுசெய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) ஆபா | *A* – கிராம நிர்வாகம் |
| (ii) மாபா | *B* – தக்கிணதேச நிர்வாகம் |
| (iii) வடஹரிக | *C* – ரோகண தேச நிர்வாகம் |
| (iv) கமிக | *D* – அரசனுக்கு ஆலோசனை வழங்குதல் |
| | *E* – அரச திறைசேரிக்குப் பொறுப்பாயிருத்தல் |

   (1) *A, B, C, D* (2) *B, C, D, A* (3) *C, B, E, A* (4) *C, D, B, A*

10. பிந்திய அநுராதபுர காலத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகளின் பிரதான அம்சம்
(1) அவற்றுள் பெரும்பாலானவை படையெடுப்புகளாகும்.
(2) அவை வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டவை.
(3) அவை சமய, பண்பாட்டு அம்சங்களைப் பற்றியவை.
(4) அவற்றுள் பெரும்பாலானவை புலப்பெயர்ச்சிகளாகும்.

11. இலங்கை மீது நடைபெற்ற பல படையெடுப்புகள் மேலே தரப்படுகின்றன. அவற்றிடையே இந்தியப் படையெடுப்பு **அல்லாத** தொடரினைத் தெரிவுசெய்க.
(1) மூன்றாம் கிருஷ்ணன் - இரண்டாம் பராந்தகன்
(2) சந்திரபானு - சென்கோ
(3) சேன, குத்திக - எலாளன்
(4) முதலாம் இராஜராஜன் - மாகன்

12. மேல்வருவனவற்றுள் எக்காரணத்திற்காக இலங்கை மீது ஏற்பட்ட வெளிநாட்டுப் படையெடுப்புகள் தொடர்பான நிகழ்ச்சிகளில் மலையரட்ட முக்கியத்துவம் பெற்றது ?
(1) போர்முனைகளுக்குத் தேவையான பொருள்களை வழங்குதல்
(2) புகலிடம்
(3) போர்த் தளபாடங்களின் உற்பத்தி
(4) மேலதிகமான ஆயுதப்படைகளைப் பெற்றுக்கொள்ளுதல்

13. அநுராதபுர, பொலநறுவைக் காலங்களில் இலங்கையின் சர்வதேச வாணிபத்தில் குறிப்பிடத்தக்க அம்சம்
(1) பரவலான பணப்புழக்கம்
(2) அயல்நாடுகளோடு மட்டும் வாணிப நடவடிக்கைகளை ஏற்படுத்தல்
(3) கீழைத்தேய, மேலைத்தேய வாணிபப் பொருள்களின் பரிமாற்றம்
(4) இந்த நாட்டில் அராபிய வணிகர் வியாபாரம் செய்தமை

14. மேல்வருவனவற்றுள் சீகிரி காசியப்பனது ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வந்த வணிகன் ஒருவன் கேள்விப்பட்டிருக்க **முடியாதவை** எவை ?
*A* – பிக்குணி சங்கம் நிறுவியமை
*B* – அபயகிரி விகாரை நிர்மாணித்தமை
*C* – தம்பதெனியாவில் இரண்டாம் பராக்கிரமபாகு சிம்மாசனம் ஏறியமை
*D* – ஐந்தாம் மகிந்தன் சிறைக்கைதியாகச் சோழ தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை
*E* – பாண்டு, பரிந்த என்போர் அடங்கிய குழுவொன்று இலங்கை மீது படையெடுத்தமை
*F* – பராக்கிரம சமுத்திரம் கட்டப்பட்டமை
(1) *C, D, F* (2) *A, C, D* (3) *B, D, F* (4) *C, E, F*

15. சீகிரிய, அநுராதபுரம், பொலநறுவை, கண்டி முதலான இடங்கள் தேசிய பாரம்பரியச் சின்னங்களடங்கிய தலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது.
(1) தேசப் பண்பாட்டுப் பெருமையையும் மகிமையையும் பிரதிபலிப்பதால்
(2) வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் பலர் அங்கு வருவதால்
(3) அவை இலங்கையின் புராதனகால இராசதானிகள் என்பதால்
(4) இந்நடவடிக்கை அவ்விடங்களிலே தொல்பொருள் ஆய்வுகளைச் செய்வதற்கு உதவியாகும் என்பதால்

16. பொலநறுவையை தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்காக இரண்டாம் கஜபாகு, முதலாம் பராக்கிரமபாகு ஆகியோருக்கிடையிலான உடன்படிக்கை பற்றிக் குறிப்பிடுவது
(1) கல்பொத்த சாசனம்
(2) பனாக்கடுவச் செப்பேடு
(3) அம்பகமுவக் கல்வெட்டு
(4) சங்கமு விகாரைக் கல்வெட்டு

17. **I** ஆம் நிரலிலே தரப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளை **II** ஆம் நிரலிலுள்ள அரசர்களின் பெயர்களோடு தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவுசெய்க.

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| (i) | இலங்கையிலுள்ள கிராமங்களின் எல்லைகளை வரையறை செய்தமை | *E* – வசபன் |
| (ii) | பர்மா மீதான படையெடுப்பு | *F* – பண்டுகாபயன் |
| (iii) | சந்திரபானுவின் இலங்கைப் படையெடுப்பு | *G* – முதலாம் பராக்கிரமபாகு |
| (iv) | "சிங்கள சங்க" என்ற கிளர்ச்சியை அடக்கியமை | *H* – இரண்டாம் பராக்கிரமபாகு |
| | | *I* – ஆறாம் புவனேகபாகு |
| | | *J* – நான்காம் பராக்கிரமபாகு |

(1) *E, G, H, J* (2) *F, I, G, J* (3) *F, G, H, I* (4) *E, I, J, G*

18. மேல்வருவனவற்றுள் இந்தியாவில் முஸ்லிம் ஆதிக்கம் ஏற்படுவதற்கு தீர்க்கமான படையெடுப்பை மேற்கொண்டவர்
   (1) முகமது வின் காசிம்   (2) கசினி முகமது
   (3) கூர்முகமது   (4) பாபர்

19. சிறப்பான காவலரண்கள் பொருந்திய அரணாகக் கோட்டையினைக் கட்டியவன்
   (1) வீர அழகேஸ்வரன்   (2) ஆறாம் பராக்கிரமபாகு
   (3) சேனாலங்காதிகார எனும் சேனாபதி   (4) நிஸங்க அழகக்கோனார் எனும் அமைச்சன்

20. ஐரோப்பியர், ஆசியாவை வந்தடைவதற்காக புதிய கடற்பாதைகளைத் தேடியமைப்பதற்கு ஏதுவான பிரதான காரணம்
   (1) பாதுகாப்பான கடற்பிரயாணங்களுக்கு பயனுடைய திசைகாட்டி கண்டுபிடிக்கப்பட்டமை
   (2) கொண்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றிய துருக்கியரான முஸ்லிம்கள் ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையிலான வர்த்தகத்தைத் தடைசெய்தமை
   (3) புதிதாக எழுச்சி பெற்ற தேசிய அரசுகளின் மன்னர்கள் புதிய கடற்பிரயாண வழிகளைத் தேடியமைக்க ஆதரவு அளித்தமை
   (4) இஸ்லாமின் பரவலைத் தடுத்து கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கான தேவை

21. அமெரிக்காவின் இரு கண்டங்களிலும் 16 ஆம் நூற்றாண்டில் மிகக் கூடிய குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய தேசம்
   (1) ஸ்பானியா   (2) பிரான்ஸ்   (3) போர்த்துக்கல்   (4) ஒல்லாந்து

22. மேல்வருவனவற்றுள் எது தொடர்பாக மாட்டின்லூதர், ஜோண்கல்வின், உல்றிக்சுவிங்கிலி என்போர் முக்கியத்துவம் பெறுகின்றனர் ?
   (1) நாடுகாண் பயணங்கள்
   (2) புரட்டஸ்தாந்து சீர்திருத்த இயக்கம்
   (3) மத்தியகால ஐரோப்பாவின் தேசிய அரசுகள்
   (4) மத்தியகால ஐரோப்பாவின் மானிய சமுதாயமுறைமைக்கு எதிரான கருத்துக்களை வெளியிடல்

23. கைத்தொழிற் புரட்சி பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க..
   (1) அது இங்கிலாந்திலே பதினெட்டாம் நூற்றாண்டில் ஆரம்பமாகி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முடிவுற்றது.
   (2) குடியேற்ற நாடுகளை உருவாக்கிய தேசங்களில் மட்டுமே அது ஏற்பட்டமை
   (3) ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சில கைத்தொழில்கள் தொடர்பானதாகவே அது அமைந்தது.
   (4) அது உலகளாவிய ரீதியில் இன்றும் நடைபெறுகின்ற ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும்.

24. ஜேர்மனியை ஒன்றுபடுத்தும் இயக்கத்துக்கு தலைவராக விளங்கியவர்.
   (1) விக்ரர் இம்மானுவேல்   (2) கமிலோ கவூர்
   (3) ஜோசப் மஸ்ஸினி   (4) ஒற்றோ வொன் விஸ்மார்க்

25. இந்தியாவிலே எந்த அரசனுடைய காலத்தில் 'ஜெஸியா' வரி நீக்கப்பட்டதோடு 'மஞ்சக்தாரி' முறை உருவாக்கப்பட்டது ?
   (1) ஔரங்கசீபு   (2) மகாஅக்பர்
   (3) ஜஹாங்கீர்   (4) ஷா - ஜெகான்

26. கண்டி இராட்சியத்திலே போர்த்துக்கேயர் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு கையாண்ட தந்திரம்
   (1) கோணப்பு பண்டாரனை அரசனாக்கியமை
   (2) தங்கள் பாதுகாவலின் கீழ் குசுமாதேவிக்கு அரசபதவி வழங்கியமை
   (3) கண்டி இராட்சியத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பியமை
   (4) கண்டிப் பிரதானிகளின் உதவியைப் பெற்றுக்கொண்டமை

27. ஆங்கிலேயர் கண்டி இராட்சியத்தை கி.பி. 1815 இல் கைப்பற்றியமைக்கு சாதகமாகவிருந்த பிரதான காரணம்.
   (1) நாயக்க வம்சம் பிரதானிகளுக்கு பிரத்தியேகமான சிறப்புரிமைளை வழங்கப்பட்டமை
   (2) சிங்களப் பிரதானிகளின் சலுகைகள் ஒழிக்கப்பட்டமை
   (3) பிரதானிகளும் குடியானவர்களும் அரசன் மீது கொண்டிருந்த விசுவாசத்தைப் பலவீனப்படுத்தியமை
   (4) கண்டி அரசனால் மனிதாபிமானமற்ற தண்டனைகள் விதிக்கப்பட்டமை

28. ஜெர்மனியர்கள், தூய ஆரியர்களின் வழிவந்த ஓர் உன்னதமான இனத்தவர் என்ற கருத்தைக் கொண்ட ஜெர்மனிய அரசியற் கோட்பாடு
   (1) பாஸிஸம்   (2) பயனுடைவாதம்   (3) மானிடவாதம்   (4) நாஸிஸம்

29. பிரித்தானியருக்கெதிராக கி.பி. 1848 கிளர்ச்சியின் பின்பு, பெரும்பாலான மக்களின் நலன்பொருட்டு பிரித்தானிய ஆட்சியாளர் மேற்கொண்ட பிரதானமான நடவடிக்கை யாது ?
(1) மலைநாட்டில் வீதிகளை அமைத்தமை
(2) ஆங்கிலக் கல்விக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை
(3) கிராமிய விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டமை
(4) செல்வம் படைத்த சுதேசிகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகளை அளித்தமை

30. மேல்வரும் அரசியல் சீர்திருத்தங்களில் எது இலங்கையில் ஒரு மத்தியதர வகுப்பு எழுச்சி பெறுவதற்கு ஏதுவான சூழ்நிலையினை உருவாக்கியது ?
(1) 1833 கோல்புறூக் கமரன்
(2) 1910 குறூ மக்கலம்
(3) 1920 மானிங்
(4) 1931 டொனமூர்

31. இங்கிலாந்து மகாராணியார் இலங்கை அரசின் தலைவர் என்ற நிலை அற்றுப்போவதற்கு ஏதுவாயமைந்தது
(1) 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு
(2) 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பு
(3) 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியலமைப்பு
(4) 1977 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு

32. மேல்வருவோருள் எவர், சீனாவிலே விவசாயிகளால் புரட்சி வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் என்று சொன்னார் ?
(1) சன் யத் ஷென்
(2) சௌ என் லாய்
(3) யுவாங் சீ காய்
(4) மாஓ சே துங்

33. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட், அநகாரிக தர்மபால, வலிசிங்ஹ ஹரிஸ்சந்திர, டி. பீ. ஜயதிலக ஆகியோருக்கிடையிலுள்ள பொதுவான பண்பு
(1) பாடசாலைகளை அமைப்பதில் அவர்கள் பெரும்பங்கு கொண்டனர்.
(2) இலங்கையின் கடந்தகாலச் சிறப்பினை உலகத்துக்கு விளக்குவதற்கு அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
(3) மதுஒழிப்பு இயக்கத்தின் முன்னோடிகளாக அவர்கள் சேவை புரிந்தனர்.
(4) பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர்களாயிருந்தனர்.

34. சோல்பரி அரசியலமைப்பின்படி மந்திரி சபையிலுள்ள எத்துறைக்குரியவரை செனற் சபையிலிருந்து கட்டாயமாகத் தெரிவுசெய்தல் வேண்டும் ?
(1) பாதுகாப்பு
(2) நிதி
(3) நீதிபரிபாலனம்
(4) வெளிநாட்டு அலுவல்கள்

35. மேல்வருவனவற்றுள் சட்டவாக்கத்தில் மக்கள் நேரடியாகப் பங்குகொள்ளுகின்ற விடயம் யாது ?
(1) ஜனாதிபதித் தேர்தல்
(2) பாராளுமன்றத் தேர்தல்
(3) சர்வஜன வாக்கெடுப்பு
(4) மாகாணசபைத் தேர்தல்

36. அரசாங்கத்தினுடைய சட்டவாக்கமானது அரசியலமைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் நீதிமன்றம்
(1) மஜிஸ்ரேற் நீதிமன்றம்
(2) உச்ச நீதிமன்றம்
(3) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(4) மேல் நீதிமன்றம்

37. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையிலுள்ள நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள விசேடமான அதிகாரம் யாது ?
(1) ஐந்து வருட காலத்துக்கு பொதுச் செயலாளரை நியமிக்கும் அதிகாரம்
(2) உறுப்பு நாடுகளில் தகராறுகள் ஏற்படுமிடத்து ஆயுதப்படைகளை அனுப்பும் அதிகாரம்
(3) இயற்கை அனர்த்தங்கள் நிகழும் உறுப்பு நாடுகளுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு ஒப்புமை வழங்குதல்
(4) எந்த மசோதாவையும் நிராகரிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தும் உரிமை

38. I வது நிரலில் தரப்பட்டுள்ள உளவு ஸ்தாபனங்களின் பெயர்கள் ஒவ்வொன்றும் II வது நிரலில் தரப்பட்டுள்ள நாடுகளுக்குரியவை. I வது நிரலிலுள்ளவற்றை II வது நிரலிலுள்ளவற்றோடு ஒப்பிட்டு அவற்றின் பொருத்தமான வரிசையைத் தெரிவுசெய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) K. G. B. உளவுச்சேவை | *A* – ஐக்கிய அமெரிக்கா |
| (ii) மத்திய உளவுத் தாபனம் (C. I. A.) | *B* – இந்தியா |
| (iii) மொசாட் அமைப்பு (MOSSAD) | *C* – இஸ்ரேல் |
| | *D* – ரஷ்யா |

(1) *D, A, C*
(2) *B, C, D*
(3) *C, A, B*
(4) *A, D, C*

39. மேல்வரும் நிறுவனங்கள் அமைக்கப்பட்ட வரலாற்று வரிசைக் கிரமம் எது ?

*A* – ஐக்கிய நாடுகள் சபை

*B* – தெற்காசிய பிராந்திய நாடுகளின் கூட்டுறவு (சார்க் அமைப்பு)

*C* – சர்வதேசச் சங்கம்

*D* – அணிசேரா நாடுகள் அமைப்பு

(1) *C, A, D, B* (2) *A, C, B, D* (3) *D, C, A, B* (4) *C, D, A, B*

40. மேல்வருவனவற்றுள் எது வருங்காலத்தில் ஏற்படக்கூடிய உலக யுத்தத்தின் விளைவாகலாம் ?

(1) போரிலே றோபோ தொழில்நுட்பம் பயன்படுத்துவதால் மனித உயிர்களின் அழிவு குறைக்கப்படும்.

(2) போரிலே அணுஆயுதங்கள் பயன்படுத்தப்படுமாகையால் வாழும் உலகின் பெரும்பாகம் அழிந்துவிடும்.

(3) வளர்ச்சி பொருந்திய நாடுகளிற் பெரும்பாலனவை அழிந்துவிடும்.

(4) வளர்ச்சியடைகின்ற நாடுகளிற் பெரும்பாலானவை அழிந்துவிடும்.

2.1.3. வினாப்பத்திரம் 1 இற்கான எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

| வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|
| 01 | 3 | 21 | 1 |
| 02 | 4 | 22 | 2 |
| 03 | 1 | 23 | 4 |
| 04 | 2 | 24 | 4 |
| 05 | 1 | 25 | 2 |
| 06 | 4 | 26 | 2 |
| 07 | 1 | 27 | 3 |
| 08 | 3 | 28 | 4 |
| 09 | 3 | 29 | 3 |
| 10 | 1 | 30 | 1 |
| 11 | 2 | 31 | 3 |
| 12 | 2 | 32 | 4 |
| 13 | 3 | 33 | 4 |
| 14 | 1 | 34 | 3 |
| 15 | 1 | 35 | 3 |
| 16 | 4 | 36 | 2 |
| 17 | 3 | 37 | 4 |
| 18 | 3 | 38 | 1 |
| 19 | 4 | 39 | 1 |
| 20 | 2 | 40 | 2 |

ஒரு விடைக்கு 02 புள்ளி வீதம் மொத்தமாக 80 புள்ளிகள்

வினாப்பத்திரம் I இற்கான இறுதிப் புள்ளி $= \frac{80}{2} = 40$

### 2.1.4. வினாப்பத்திரம் I இற்கு விடையளித்த விதம் பற்றிய அவதானிப்பு (பாடப்பரப்புக்கேற்ப)




| பாடப்பரப்பு | வினாக்களின் எண்ணிக்கை | இலகுதன்மை கூடிய வினா இலக்கமும் அதன் இலகுச்சுட்டியும் | இலகுதன்மை குறைந்த வினா இலக்கமும் அதன் இலகுச்சுட்டியும் |
|---|---|---|---|
| இலங்கை வரலாறு | 24 | 9 (69%) | 8 (21%) |
| உலக வரலாறு | 16 | 25 (74%) | 18 (12%) |




இலங்கை வரலாறு பற்றி 24 வினாக்களும் உலக வரலாறு தொடர்பில் 16 வினாக்களும் வினாப்பத்திரம் I இல் உள்ளடங்கி இருந்தன. இலங்கை வரலாற்றின் ஒட்டு மொத்த இலகுதன்மை 46% ஆகும். உலகவரலாற்றில் 49%ஆகும். இலங்கை வரலாற்றின் மொத்த இலகுதன்மை உலக வரலாற்றின் இலகுதன்மையை விடக் குறைவடைவதற்கான காரணங்கள் - விடயங்களைப் பொருத்தமாக இணைக்கும் வினாக்களில் அனைத்தையும் சரியாக அறிந்திராமை, உரிய வினாக்களின் கருத்தை விளங்கிக் கொள்வதிலான இடர்ப்பாடு, தனிநபர்களும் அவர்களின் செயற்பாடுகளும் பற்றிய சரியான விளக்கமின்மை, அரசியலமைப்பினை வேறுபடுத்தி இனம் காணும் நுண்ணாய்வு அறிவின்மை என்பவற்றைக் குறிப்பிடலாம். உலக வரலாறு பற்றிய 6 வினாக்களில் 5 வினாக்கள் புராதன இந்திய வரலாற்றை ஆதாரமாகக் கொண்டனவாகும். மாணவர்களுக்கு இந்திய வரலாறு இலகுவான தலைப்பானதினால் சரியான விடையைக் குறிப்பிட்டுக் காட்ட இலகுவாயமைந்தது. ஏனைய வினாக்களில் 20, 21, 22, 23 என்பன நாடுகாண் பயணங்கள் சமய சீர்திருத்தங்கள், கைத்தொழில் புரட்சி ஆகிய இலகுவில் தகவல்கள் பெறக்கூடிய தலைப்புகளில் தயாரிக்கப்பட்டிருந்தன. இக்காரணத்தினால் உலக வரலாற்றில் அதிக இலகுத்தன்மை காட்டப்பட்டுள்ளது எனலாம்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் நிகழ்வுகள், தனிநபர்கள், ஆண்டுகள் இவற்றுடன் தொடர்பான சந்தர்ப்பங்கள் என்பன பற்றி சரியான விடயங்களைக் காட்டுதல், பயிற்சிகள் செய்வித்தல் என்பன பொருத்தமானவையாகும். பாடவிடயங்களுக்குரிய எண்ணக்கருக்கள் பற்றிய விளக்கங்கள், வினாக்களில் கேட்கப்படுவனவற்றைச் சரியாக விளங்கிக்கொள்ளும் ஆற்றல் என்பன விருத்தி செய்யப்படல் வேண்டும்.

2.1.5 **வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடைத் தெரிவுக்கான துலங்கலை வழங்குவதில் மாணவர் சதவீதம்**

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவும் செய்யப்பட்ட மாணவர் சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | 3 | 14% | 12% | 63% | 11% |
| 2 | 4 | 19% | 11% | 22% | 48% |
| 3 | 1 | 47% | 12% | 21% | 20% |
| 4 | 2 | 22% | 48% | 18% | 12% |
| 5 | 1 | 44% | 11% | 37% | 8% |
| 6 | 4 | 10% | 24% | 8% | 58% |
| 7 | 1 | 29% | 42% | 13% | 16% |
| 8 | 3 | 20% | 7% | 21% | 52% |
| 9 | 3 | 5% | 16% | 69% | 10% |
| 10 | 1 | 36% | 17% | 37% | 10% |
| 11 | 2 | 20% | 52% | 18% | 10% |
| 12 | 2 | 13% | 47% | 14% | 26% |
| 13 | 3 | 11% | 16% | 62% | 11% |
| 14 | 1 | 40% | 23% | 17% | 20% |
| 15 | 1 | 57% | 9% | 28% | 6% |
| 16 | 4 | 18% | 31% | 18% | 33% |
| 17 | 3 | 13% | 21% | 57% | 9% |
| 18 | 3 | 40% | 25% | 12% | 23% |
| 19 | 4 | 10% | 36% | 11% | 43% |
| 20 | 2 | 14% | 57% | 16% | 13% |
| 21 | 1 | 44% | 21% | 23% | 12% |
| 22 | 2 | 15% | 45% | 18% | 22% |
| 23 | 4 | 22% | 10% | 9% | 59% |
| 24 | 4 | 8% | 10% | 23% | 59% |
| 25 | 2 | 8% | 74% | 10% | 8% |
| 26 | 2 | 27% | 27% | 16% | 30% |
| 27 | 3 | 12% | 13% | 43% | 32% |
| 28 | 4 | 19% | 6% | 25% | 50% |
| 29 | 3 | 11% | 21% | 59% | 9% |
| 30 | 1 | 26% | 26% | 18% | 30% |
| 31 | 3 | 10% | 23% | 50% | 17% |
| 32 | 4 | 21% | 8% | 12% | 59% |
| 33 | 4 | 10% | 8% | 31% | 51% |
| 34 | 3 | 21% | 23% | 42% | 14% |
| 35 | 3 | 32% | 12% | 48% | 8% |
| 36 | 2 | 14% | 51% | 18% | 17% |
| 37 | 4 | 20% | 15% | 25% | 40% |
| 38 | 1 | 53% | 13% | 16% | 18% |
| 39 | 1 | 46% | 17% | 17% | 20% |
| 40 | 2 | 15% | 66% | 9% | 10% |

ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

## 2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பும் முடிவும் ஆலோசனைகளும்

2012 ஆம் ஆண்டு வரலாற்று வினாப்பத்திரம் I இல் இலங்கை வரலாற்றுப் பகுதியில் 24 வினாக்களும் உலக வரலாற்றுப் பகுதியில் 16 வினாக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றில் கேட்கப்பட்ட வினா இல. 1, 9, 13 ஆகியவற்றுக்கு மட்டுமே இலகுச்சுட்டி 60% ஆக அதிகரித்திருந்ததுடன் வினா இல. 8, 26, 30 ஆகியவற்றுக்கான இலகுச்சுட்டி 30% ஆக குறைந்த பெறுமானம் கொண்டிருக்கின்றது.

இலங்கை வரலாற்றுக்கான 1, 2, 3, 4, 16 ஆகிய வினாக்களுக்குச் சரியான விடையளிப்பதில் இலகுச்சுட்டி 33% இலிருந்து 63% வரை உள்ளது. இவ்வினாக்கள் வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள் பற்றியனவாகும். இருப்பினும் மாணவர்க்கு மூலாதாரங்கள் பற்றிய சரியான விளக்கமின்மை காணப்படுகிறது. வரலாறு பற்றிய வரைவிலக்கணங்களை காட்சிப்படுத்துவதினூடாக ஞாபக சக்தியை விருத்தி செய்யலாம். மூலாதாரங்களையும் அவற்றில் உள்ளடங்கும் முக்கிய விடயங்களையும் அட்டவணைப்படுத்துதல் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப் பொருத்தமான வழிமுறையாகும்.

9 ஆம் 13 ஆம் வினாக்கள் இலங்கை வரலாற்றின் நீர்வள நாகரிகத்துக்குரிய அரசியல், பொருளாதார அம்சங்கள் பற்றிய ஆற்றலைப் பரீட்சிப்பதாகும். இவற்றுக்குக் காட்டப்பட்ட துலங்கல் முறையே 69% உம் 62% உம் ஆகும். நீர்வள நாகரிக கால ஆட்சி, பொருளாதாரம் என்பன பற்றிய விடயங்கள் கவர்ச்சிகரமானவையானதினால் திருப்பதிகரமான அடைவினை நெருங்கியுள்ளனர். 6 ஆம் 7 ஆம் தரங்களிலும் இது பற்றிக் கலந்துரையாடப்பட்டமை பாடநூல்கள் வேறு துணை நூல்களைப் பரிசீலிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிட்டியமை என்பன இந்த அடைவுக்குத் துணையாகி உள்ளன. இதை மேலும் விருத்தி செய்வதற்கு குறுவிடை வினாக்கள் தயாரித்தல், தகவல்கள் சேகரித்து சுவர் பத்திரிகைகள் தயாரித்து காட்சிப்படுத்தல் என்பவை பொருத்தமானவையாகும். வகுப்பறையினுள் அறிவை அளவிடக்கூடிய போட்டிகள் நடாத்துதல், தரப்பட்ட தலைப்பில் முன்னாயத்தப்படுத்தாத பேச்சினை முன்வைத்தல் போன்ற சந்தர்ப்பங்களையும் வழங்க முடியும்.

8 ஆம் வினாவுக்குச் சரியான துலங்கலை 21% மானோரே காட்டியுள்ளனர். 4 ஆம் விடை சரியானதெனக் கருதி 52% மானோர் தெரிவுசெய்துள்ளனர். சீகிரிய கலையாக்கம் பற்றி மாணவர் அதிக கவனம் செலுத்தியது இதற்கான காரணம் எனலாம். இருப்பினும் சீகிரியா பற்றிய கற்றலின் போது தொழினுட்பம், சூழல் பாதுகாப்பு என்பன பற்றியும் அதிக முக்கியத்துவம் உண்டென்பதில் கவனம் செலுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை விருத்தி செய்வது அவசியமாகும்.

14 ஆம் வினாவானது இலங்கையின் வரலாற்று காலவரன் முறை பற்றிய விளக்கத்தைப் பரீட்சிப்பதற்கானதாகும். அதற்கு சரியான துலங்கலை வெளிப்படுத்தியோர் 40% மாகும். 60% ஆனோர் தவறான விடையையே தெரிவு செய்திருந்தனர். காலவரன் முறையும் நிகழ்வுகளும் பற்றிய சரியான கிரகித்தல் இன்மையே இதற்குக் காரணமாகும். இராச்சியங்களின் பெயர்ப்பட்டியலில், முக்கியமான மன்னர்களின் ஒழுங்குமுறைக்கும் நிகழ்வுகளுக்கும் இடையிலான தொடர்புகளைக் கண்டறிதல் என்பவற்றுக்கு நிகழ்வுகளைப் பொருத்தமாக இணைத்தல் அட்டவணைப்படுத்துதல் போன்ற பயிற்சிகளுக்கு வழிகாட்டுதல் பொருத்தமானதாகும்.

26ஆம் 30 ஆம் வினாக்களுக்கும் சரியான துலங்கல் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. 26 ஆம் வினாவுக்கு 4 தெரிவுகளையும் தெரிவு செய்தோர் 27%, 27%, 16%, 30% ஆகும். 30 ஆம் வினாவுக்கு 26%, 26%, 18%, 30% ஆகும். இந்த இரண்டு வினாக்களும் முறையே கண்டி இராச்சியம் இலங்கையின் அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பன பற்றியனவாகும். ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டிருந்த விடைகள் பெருமளவு ஒத்ததாக இருந்தமையால் சரியான விடையைத் தெரிவு செய்வதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனால் சரியான விடைத் தெரிவு குறைந்துள்ளது. விடைகளின் வேறுபாடுகளை அறிந்து மிகச் சரியான விடையைத் தெரிவு செய்வதற்கு வழிகாட்டுதல் அவசியமாகும். தரப்பட்டுள்ள விடயங்களின் வேறுபாடுகள் பற்றிக் கவனம் செலுத்தி விடையைத் தெரிவு செய்தல் நல்ல பெறுபேற்றைத் தரும்.

உலக வரலாறு பற்றிய வினாக்களில் 25 ஆம் 40ஆம் வினாக்களுக்கு மட்டும் 60%இற்கும் மேலான இலகுச்சுட்டி காட்டப்பட்டுள்ளது. 7 ஆம் 18 ஆம் வினாக்கள் இரண்டிற்கும் 30%ஆகும். குறைவாகவே இலகுச்சுட்டி காட்டப்பட்டுள்ளது.

உலக வரலாற்றிற்கு உரிய 25 ஆம் வினாவுக்கு சரியான விடையை 74%மானோர் தெரிவு செய்திருந்தனர். பேரரசர் அக்பரின் கொள்கை பற்றிய விளக்கமும் அவரின் பிரகடனங்கள் பாட நூலில் மனம் கவரும் விதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதும் விடயங்களை நினைவில் வைத்திருக்க உதவி புரிந்துள்ளன. மன்னர்களின் விசேட நிகழ்வுகள் தொடர்பான தகவல்களை இரசனையுடன் முன்வைத்தலின் மூலம் அடைவு மட்டத்தை மேலும் உயர்வடையச் செய்யலாம். இதற்காக செய்யுள்கள், பிரகடனங்கள், உறுப்புரைகள் என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

உலக மகா யுத்தம் பற்றிய 40 ஆம் வினாவுக்கு 66% சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். நவீன தொழினுட்பம், போர் ஆயுதங்கள் பற்றி வெளிப்புறச் சூழலில் பெற்ற அறிவு இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். பாடவிடயங்களுக்கேற்ற தகவல்களைப் பல்வேறு ஊடகங்கள் மூலம் பெறுதல், அவற்றைக் காட்சிப்படுத்தல், தகவல்களைச் சுருக்கமாக்குதல் என்பனவற்றை அறிவு விருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

7 ஆம் வினா இந்தியாவுக்கு முஸ்லீம்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பற்றியதாகும். சரியான விடையை 29%ஆனோர் தெரிவுசெய்திருந்தனர். 42% ஆனோர் தவறான 2 ஆம் விடையைத் தெரிவு செய்திருந்தனர். காலவரன் முறையுடன் ஆக்கிரமிப்பாளருடைய நோக்கங்களின் இயல்பும் மாறுபடுவது பற்றிய விளக்கமின்மை உள்ளது. இந்தியா மீது மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம்களின் ஆக்கிரமிப்பு காலத்துக்கேற்ப வேறுபடும் விதம் அவற்றின் நோக்கங்கள் என்பன பற்றிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் கவனத்தைச் செலுத்துதல் முக்கியமானதாகும். இதற்காக ஆண்டுகள், முஸ்லிம் ஆக்கிரமிப்பின் நோக்கம் என்பவற்றை ஒழுங்குபடுத்துதல், அட்டவணைப்படுத்துதல் என்பனவற்றை மேற்கொள்ளலாம்.

18 ஆம் வினா இந்தியாவில் முஸ்லிம் ஆதிக்கம் பரவிய விதம் பற்றியதாகும். இதற்குச் சரியான விடையை 12% இற்கும் குறைவானோரே காட்டியிருந்தனர். பாடவிடயங்களில் ஒரே விதமான ஒத்த பெயர்கள் பயன்படுத்தப்படுவதால் விடயங்களை வேறுபடுத்திக் கிரகிக்க முடியாத இடர்ப்பாடு காணப்படுகிறது. நினைவில் வைத்திருக்க முடியாமையால் தவறான துலங்கல் உயர்மட்டத்தைப் பெற்றுள்ளது. தனியாள் தொடர்பான விடயங்களை தனித்தனியாக கோவைப்படுத்தல், அட்டவணைப்படுத்தல் என்பன விடயங்களை உறுதியாக்கிக் கொள்ளுவதற்கு உதவும்.

உயர் மட்ட அடைவைப் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்வதற்கு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் புறவரிப்படங்கள், ஒளிப்படங்கள், அட்டவணைகள் என்பவற்றைப் பயன்படுத்தல், அறிவை அளக்கவல்ல போட்டிகள் நிகழ்த்துதல் என்பன மூலம் விரும்பத்தக்க கற்றல் சூழலை ஏற்படுத்துதல் பொருத்தமானதாகும்.

விடயங்களை நினைவில் வைத்திருக்க முடியாத குறைபாடு விசேட விடயங்கள் பற்றி கவனம் செலுத்தாமை, வினாக்களுக்கு விடைகளை வழங்கும் தேர்ச்சி போதுமானதாக இல்லாமை என்பன அடைவு மட்டம் குறைவடையக் காரணங்களாகும். வினாக்களை சரியாக விளங்கிக் கொள்ள வழிப்படுத்தல், மற்றும் எண்ணக்கருக்கள், சொற்பொருள் விளக்கம் என்பன பற்றி மாணவருடன் கலந்துரையாடல் என்பன மூலம் இவ்வாறான குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்கு மாணவர்களைச் செயற்படுத்துதல் உயர் அடைவு மட்டத்தை அவர்கள் அணுக வழியேற்படுத்தும்.

## 2.2 வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு

**நேரம் 03 மணித்தியாலங்கள். மொத்தப் புள்ளிகள் 120**

இது I, II, III என மூன்று பகுதிகள் கொண்டது.

**பகுதி I**

முதலாம் வினா மாத்திரம் இப்பகுதிக்குரியது. இது (அ), (ஆ) என்ற இரு பகுதிகளைக் கொண்டது. அவை கட்டாய வினாக்களாகும். "அ" பகுதியில் இலங்கையின் வரலாற்றுப் புகழுடைய இடங்கள் 10 இனை குறித்துப் பெயரிடுதலும் உலகப் புறவரிப்படத்தில் வரலாற்றுப் புகழுடைய 8 இடங்களை குறித்துப் பெயரிடுதலும் எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கு முறையே 10 புள்ளிகளும் 8 புள்ளிகளுமாக 18 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. "ஆ" பகுதியில் ஒளிப்படங்கள் தொடர்பானதும் வரலாற்று நிகழ்வுகளும் பற்றியதுமான குறு வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும். இதற்குரிய புள்ளிகள் 12 ஆகும்.

**பகுதி II**

இலங்கை வரலாற்றுடன் தொடர்புடைய கட்டமைப்பு வகை, பகுதிக் கட்டமைப்பு வகையிலான ஐந்து வினாக்களில் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். வினா ஒன்றிற்குப் 18 புள்ளிகள் வீதம் மொத்தம் 54 புள்ளிகள்

**பகுதி III**

இந்தியா, ஐரோப்பா, உட்பட தூர கிழக்கு ஆசிய நாடுகளின் வரலாறு தொடர்பான கட்டமைப்பு, பகுதிக் கட்டமைப்பு வகையான நான்கு வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்குப் 18 புள்ளிகள் வீதம் மொத்தம் 36 புள்ளிகள்

வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 30+54+36 = 120

வினாப்பத்திரம் II இற்கான இறுதிப் புள்ளி = 120 ÷ 2 = 60

## 2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும்

★ வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பு வரைபு 2, 3, 4.1, 4.2, 4.3 என்ற முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது. வினாவுக்கு உரிய வரைபு, உரிய வினாக்களின் அவதானிப்பு, முடிவுகள் என்பனவற்றுடன் காட்டப்பட்டுள்ளது.

**வினா இலக்கம் 1**

பகுதி I

1. (அ) பகுதி (i) இன் கீழ்த் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இன் கீழ்த் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள ஒரு பகுதி உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.
   (i) கந்தளாய் வாவி, ஜஜ்ரநதி, பேராதனை, தந்திரிமலை, கோகர்ண விகாரை, நல்லூர், நீர்கொழும்பு, களுத்துறை, பதுளை, முல்லேரியாவ (10 புள்ளிகள்)
   (ii) சிந்துநதி, பத்தேவியா, கல்கத்தா, ஜெருசலேம், சிங்கப்பூர், தாய்லாந்து, ஹிரோஷிமா, ஹஸ்னி (08 புள்ளிகள்)

(ஆ) (i) மேலே தரப்பட்ட *A, B, C, D* ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள வரலாற்று விபரங்களோடு தொடர்புடைய மக்களை வரிசைக்கிரமமாக உமது விடைத்தாளில் எழுதுக.
   *A* - மகாவம்சத்தில் சொல்லியவாறு இலங்கையை வந்தடைந்த முதலாவது ஆரியர் குடியேற்றக் குழுவின் தலைவர்
   *B* - இத்தாலியின் அரசியல் தலைவராகவிருந்து அந்நாட்டை இரண்டாம் உலகப்போரில் பங்குகொள்ளச் செய்தவர்
   *C* - தக்கிண தேசத்தை பரிபாலனம் செய்தபோது பண்ட வாவியை விசாலமாக்கி அதனைச் சூழ்ந்த பகுதியை அபிவிருத்தி செய்தவர்
   *D* - இந்தியாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்த பகுதிகளுக்கு ஒரு புறம்பான தேசத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டவர் (04 புள்ளிகள்)

● *A, B* பகுதிகளில் தரப்பட்டுள்ள படங்களைப் படித்து வினாக்களுக்கான விடைகளை வரிசைக்கிரமத்தில் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. இந்தப் படைப்பு (*A*) எதனைக் குறிக்கின்றது ?
   2. இது எந்த வரலாற்று நகரத்தில் காணப்படுகிறது ?
   3. இப்படைப்பிற்கு மாதிரியாகக் கொள்ளப்பட்ட மலர் யாது ?
   4. எந்த அரசனால் இது கட்டப்பட்டது எனக் கொள்ளப் படுகிறது ?
   (04 புள்ளிகள்)



*A*

(iii) 1. படம் (*B*) இல் காணப்படுகின்றவரின் பெயர் என்ன ?
   2. அவர் சேவை புரிந்த அரசாங்க முறையினை ஏற்படுத்திய அரசியல் யாப்பு எது ?
   3. இலங்கையிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் இவர் வழங்கிய சிறப்புரிமை யாது ?
   4. உயர் தரமான கல்வியைத் திறமையுடைய மாணவர்களுக்கு வழங்குவதற்காக இவர் ஒருவகைப் பாடசாலைகள் முறையைத் தொடங்கினார். இப்பாடசாலைகள் எப்பெயரால் குறிப்பிடப் படுகின்றன ? (04 புள்ளிகள்)



*B*

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

**வினா 1**

(1) (அ) (i)




(10 புள்ளிகள்)

1. (அ) (ii)




**(08 புள்ளிகள்)**

(ஆ) (i)

*A* - விஜயன்
*B* - பெனிடோ முசோலினி / முசோலினி
*C* - 1ம் பராக்கிரமபாகு மன்னன் / மகா பராக்கிரமபாகு மன்னன்
*D* - முஹம்மது அலி ஜின்னா / அலி ஜின்னா **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(ii)

1. தாமரை தடாகம் / தடாகம் / பொய்கை
2. புலஸ்திபுரம் / பொலன்னறுவை
3. தாமரைப் பூ / தாமரை
4. 1ம் பராக்கிரமபாகு மன்னன் / மகா பராக்கிரமபாகு மன்னன் **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)

1. சீ. டபிள்யு. டபிள்யு கன்னங்கர
2. டொனமூர் யாப்பு / 1931 ஆண்டு யாப்பு
3. இலவசக் கல்வி
4. மத்திய பாடசாலைகள் / மத்திய கல்லூரிகள் **(01 x 04 = 04 புள்ளிகள்)**

## 1 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்




முதலாம் வினா கட்டாய வினாவாக அமைந்தாலும் 99% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 30 ஆகும்.

00 - 07 புள்ளி ஆயிடையில் 39%

08 - 15 புள்ளி ஆயிடையில் 46%

16 - 22 புள்ளி ஆயிடையில் 12%

23 - 30 புள்ளி ஆயிடையில் 3%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 23 அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் 3% ஆனவர்கள் ஆவர். 39% ஆனவர்கள் 7அல்லது அதை விடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினா 14 உப பகுதிகளைக் கொண்டது. அவற்றுள் 5 உபபகுதிகளின் இலகுதன்மை 70% இலும் மேற்பட்டது. பகுதி (ஆ) (ii) 3 வினாவானது 94% அதிக இலகுதன்மையும் உப பகுதி (ஆ) (ii) வினாவானது 15% குறைந்த இலகுதன்மையும் கொண்டுள்ளது.

முதலாம் வினாவின் (அ) பகுதியில் (i) *A*, (ii) 1, 3, (iii) 1, 3 என உபபகுதிகளுக்கான இலகுதன்மை 70% இற்கும் அதிகமாகும். இது முன்னைய தரங்களிலிருந்து பெற்ற அறிவு மற்றும் இப்போதும் கண்களில் படும் படங்கள் மூலம் கிரகித்த தகவல்கள் என்பன பற்றியதால் அடைவு உயர்வாக உள்ளது. இதற்கமைய பாடத்திட்டத்துக்கு ஏற்ப பாடநூலில் காணப்படும் படங்களை மாணவர் எப்போதும் காணக்கூடியவாறு ஒழுங்கமைத்தலும் அப்படங்களுக்கு ஏற்ற குறுவினாக்கள் விடைகளைத் தயாரிப்பதில் அவர்களை ஈடுபடுத்துதலும் அடைவை மேலும் மேம்படுத்த உதவும்.

(ஆ) (i) *C*,(ஆ) (ii) 4, (ஆ) (iii) 2, 4 என்ற உபபகுதிகளுக்கான இலகுதன்மை 30% இற்கும் குறைந்த பெறுமானமாகும். முதலாம் வினாவின் குறிப்பிட்ட சில உபபகுதிகளின் இலகுதன்மை குறைவடைய புறவரிப் படங்களில் குறித்துப் பெயரிடுதல் நுட்பத்திறன் பற்றிய தேர்ச்சி போதாமை, வரலாற்று இடங்களின் அமைவு பற்றிய தெளிவான விளக்கமின்மை, கன்னங்கரா அவர்களின் காலம், அக்காலத்தில் நிலவிய அரச நிர்வாகம் அவர்களின் மத்திய கல்லூரிகள் எண்ணக்கரு, ஒன்றோடொன்றுள்ள தொடர்பு என்பன பற்றி மாணவர்களிடம் விளக்கமின்மை ஆகியனவே காரணங்கள் எனலாம். பாடசாலையில் படங்களில் குறித்துப் பெயரிடுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல் அவசியமாகும். படங்களில் வரலாற்று இடங்களைக் குறிக்கும் போது அதற்குரிய பௌதிகப் பண்புகளைப் பயன்படுத்தி குறித்த இடத்தை அடையாளம் காண்பதற்கு தேர்ச்சியை வழங்க வேண்டும். குறித்த இடங்கள் சரியாக அடையாளப்படுத்தப்பட்ட படங்களை மாணவர்க்கு வழங்கி அந்த இடங்களில் பெயரிடுவதற்கான பயிற்சிகளை வழங்கி அவற்றில் ஈடுபடுத்துதல் பொருத்தமானதாகும். வரலாற்று இடங்களை இனங்காணும்போது பௌதிகப் பண்புகளைப் போலவே அதனுடன் இணைந்துள்ள வரலாற்று தகவல்களையும் கற்பதில் ஈடுபடுத்துதல் சிறந்ததாகும்.

புறவரிப் படங்களில் அடையாளமிடும் போது பெயரிடுவது பற்றியும் பயிற்சிகள் வழங்குவது பொருத்தமானதே சரியாக அடையாளமிட்டுப் பெயரிடப்பட்ட படங்களை கட்புல சாதனமாகப் பயன்படுத்த முடியும். படங்களில் குறித்துப் பெயரிடும்போது ஒவ்வொரு தலைப்பிற்கும் உரியவற்றைக் குறித்துப் பெயரிடல் படங்களில் குறித்துப் பெயரிடும் முகாம் நடாத்துதல், வரலாற்றுப் படங்கள் கொண்ட சஞ்சிகை தயாரித்தல் என்பனவற்றில் மாணவரை ஈடுபடுத்தலாம். அரசர்களின் பணிகளை வெவ்வேறாக அட்டவணைப்படுத்துதல், அரசர்கள் பற்றிய சிறு உரையொன்றை நிகழ்த்தும்படி செய்தல், அரசர்களின் பெயர்களை எழுதும்போது 1ஆம் 2ஆம் 3ஆம் என்பவற்றையும் பயன்படுத்துதல், ஒவ்வொரு காலப்பகுதிக்குமுரிய அரச நிர்வாகம், அக்காலப்பகுதியில் சிறப்பாக இடம்பெற்றவர்கள், அவர்களின் பணிகள் பற்றி விளக்கம் பெறுதல், தொடர்புகளை அறிதல் என்பன மூலம் வரலாற்று நிகழ்வுகள் பற்றிய விடயங்களை நினைவில் வைத்திருக்கும் பயிற்சியை மாணவர்களிடம் விருத்தி செய்யலாம்.

# பகுதி II

**வினா 2**

**தேர்ச்சி :** நீர்வள நாகரிகத்தின் அரசியல், பொருளாதார நிலைமைகள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரிசீலித்தல்

**2.** (i) *பக்கத்திலுள்ள இலங்கைப் படத்தில் A, B, C என்றவாறு குறிக்கப்பட்டுள்ள நதிக்கரைகள், ஆதியில் இந்தியாவிலிருந்து இந்நாட்டில் குடியேறுவதற்காக வந்து குடிபுகுந்தவர்களினால் தெரிவு செய்யப்பட்டன. அவற்றைச் சரியான ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.* (03 *புள்ளிகள்*)




(ii) *D, E, F, G ஆகியவை குறிக்கும் ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சியுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்க.*

*D* - *முதன்முதலாக அநுராதபுரத்தை இலங்கையின் இராசதானியாக்கியமை*

*E* - *இலங்கையில் முதன்முதலாக சத்திரியன் ஒருவனுக்குரிய முடிசூட்டு விழாவை நடத்தியமை*

*F* - *ருவான்வெலிசாய, மிரிசவட்டி ஆகிய தூபிகளைக் கட்டியமை*

*G* - *மாத்தளை அலுவிகாரையில் திரிபிடகத்தை எழுதுவதற்கு ஆதரவளித்தமை*

*(துட்டகைமுனு, கவந்திஸ, பாண்டுகாபயன், பாண்டு வாசுதேவன், தேவநம்பியதீசன், வலகம்பா, வொஹாரிகதிஸ்ஸ)*

(04 *புள்ளிகள்*)

(iii) *வசபனின் அரசியல், பொருளாதார முக்கியத்துவத்தை ஒவ்வோர் உதாரணத்துடன் விளக்குக.* (05 *புள்ளிகள்*)

(iv) *நீரியல் நாகரிகம் நிலவிய காலத்தில் இந்நாட்டில் கைத்தொழில் விருத்தி பற்றி* ***மூன்று*** *உதாரணங் காட்டி விளக்குக.* (06 *புள்ளிகள்*)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

2. (i)
*A* - கதம்ப நதி / மல்வத்து ஓயா / அருவி ஆறு
*B* - கோண நதி / கலா ஓயா
*C* - கல்கா நதி / கல்லோயா **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
*D* - பண்டுகாபயன்
*E* - தேவநம்பியதீசன்
*F* - துட்டகைமுனு
*G* - வலகம்பா **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii) ★ **அரசியல் முக்கியத்துவம்**

- புதிய அரசியல் வம்சத்தில் ஆட்சிபீடம் ஏறியமை (இலம்பகர்ணா அரசியல் வம்சம்)
- இலங்கை முழுவதிலும் இவருடைய ஆட்சி பரவிக் காணப்பட்டமை.
  (வடக்கில் வல்லிபுர சாசனம், தெற்கில் சித்துள் பவ்வ, திஸ்ஸமகாராமை, கிழக்கில் மட்டக்களப்பு, மேற்கில் குருநாகல் சாசனம்)
- நீண்ட காலம் அமைதியான ஆட்சியை மேற்கொண்டமை (44 வருடங்கள்)
- இவருடைய காலத்தில் உறுதியான நிர்வாகம் காணப்பட்டமை.
  (உ-ம்: யாழ்ப்பாணத்தில் இசிகிரி என்ற அமைச்சர் நியமனம்)

★ **பொருளாதார முக்கியத்துவம்**

- பாரிய குளங்களின் நிர்மாணம் ஆரம்பம்
- 11 குளங்கள், 12 கால்வாய்கள் அமைக்கப்பட்டமை
  (உ-ம் : மகாவிலாச்சிய, நொச்சிப்பொத்தான, கிரிவடுல்ல, மனாகட்டிய குளங்கள்)
- எலகர கால்வாய் அமைக்கப்பட்டமை.
- சுரங்கவழி கால்வாய் நீர்ப்பாசனம் மூலம் விவசாயத்திற்கு நீர் வழங்கல்

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) - விவசாய நடவடிக்கைகளுடன் இணைந்த கைத்தொழில்கள் காணப்பட்டமை. (உ-ம் : நெற்செய்கைக்குரிய கலப்பை, நுகத்தடி, மட்டப்பலகை, கத்தி, அரிவாள், மண்வெட்டி, உற்பத்தி செய்யப்பட்டதைப் பற்றி “அட்டுவா” எனும் கதைகளிலும், சத்தர்மரத்னாவலிய எனும் நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.)

- உலோகக் கைத்தொழிலின் கீழ் போர்த்தள பாடங்கள் (ஆயுதம்), அலங்கார புத்தர் சிலை, தெய்வ சிலைகள், விளக்குகள் செய்யப்பட்டன.
- நெசவுக் கைத்தொழிலின் கீழ் நூல்நூற்றல், புடவை நெய்தல் காணப்பட்டன.
- மட்பாண்டக் கைத்தொழில் வளர்ச்சி பெற்றிருந்தது.
- கருப்பஞ்சாறு பிழியும் இயந்திரம், கருப்பம் பாணியிலிருந்து கருப்பட்டி (சர்க்கரை) தயாரித்தல் என்பன.
- கட்டிட நிர்மாணிப்புக்கு தேவையான கருங்கல், செங்கல் உற்பத்திக் கைத்தொழில் என்பன

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**2 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**

**வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்**




வினா இலக்கம் 2 இனை 83% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 18 ஆகும்.
0 - 4 புள்ளி ஆயிடையில் 38%
5 - 9 புள்ளி ஆயிடையில் 37%
10 - 13 புள்ளி ஆயிடையில் 16%
14 - 18 புள்ளி ஆயிடையில் 9%
ஆனவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 14 அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் 9% ஆனவர்கள் ஆவர். 38% ஆன மாணவர்கள் 4 அல்லது அதை விடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை




இவ்வினாவுக்குரிய பகுதிகள் உபபகுதிகள் 9 இல் இலகுதன்மை கூடிய உப பிரிவு (ii) F ஆகும். அதன் இலகுதன்மை 83% ஆகும். இலகுதன்மை குறைந்த பகுதி (iv) ஆகும். அதன் இலகுதன்மை 27% ஆகும்.

இலங்கையில் ஆரியர் குடியிருப்புகளை அமைத்தல், அரசர்களின் அரசியல், பொருளாதார சமயப் பணிகள் பற்றிய இவ்வினாக்களைத் தெரிவு செய்தோர் எண்ணிக்கை 83% ஆகும். ஆகக் கூடிய இலகுதன்மையை பகுதி (ii) இன் *F, G* என்பன காட்டியுள்ளன. அவை முறையே 83%மும் 75%மும் ஆகும் அங்கு அடைப்புக் குறிக்குள் விடைகள் குறிப்பிடப்பட்டிருந்ததால் விடையைத் தெரிவு செய்தல் இலகுவாயமைந்தது எனலாம். பகுதி (iii), (iv) என்பவற்றின் இலகுதன்மை குறைவாகக் காணப்படுகிறது. இவை முறையே 31%உம் 27% உம் ஆகும். அரசர்களின் பணிகள் பற்றிய அறிவின்மை, அரசியல் பொருளாதாரம் சமயம் என்பனவற்றை வேறுபடுத்தி இனங்காணும் விளக்கம் போதாமை என்பன இவற்றுக்குக் காரணம் எனலாம். மேலும் கைத்தொழில் பற்றிய விடயங்களை முன்வைக்கும்போது விவசாயத்தையும் கைத்தொழில் என்று தவறாக விளங்கிக் கொண்டிருந்தமை புலனாகியது. விடைகள் அளிக்கும் போது விடயங்களை விளக்குதல் விவரித்தல் பற்றிய ஆற்றல் போதுமானதாக இல்லாமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இதற்காக நீர்வள நாகரிக அரசர்களின் அரசியல் பொருளாதாரம் சமயம் பற்றிய தகவல்களைத் தேடியறிதலில் ஈடுபடுத்தல் அவற்றின் கால வரன்முறை பற்றிய விளக்கம் அளித்தல் விடயங்களை அட்டவணைப்படுத்துதல் என்பவற்றை வகுப்பறையில் செயற்படுத்தலாம். நுண்மதிக்குழுக் கலந்துரையாடலை நிகழ்த்துதல், பாவனை செய்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல், விடயங்களை விவரித்தல், விளக்குதல் போன்றவற்றில் பயிற்சிகளை வழங்குதல் என்பன பொருத்தமானவையாகும்.

**வினா** 3

**தேர்ச்சி :** நீர்வள நாகரிகத்தின் நீர்ப்பாசன முறை விருத்தி பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரிசீலித்தல்.

**3.** (i) *அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள எந்த ஆறுகளின் குறுக்கே, அணைகட்டியதன் மூலம் மேல்வரும் குளங்கள் அமைக்கப்பட்டன என்பதைத் தெரிவுசெய்க.*

*A* - *நாச்சதூவ வாவி*

*B* - *விலாச்சிய வாவி*

*C* - *குருளு வாவி*

*(கல்லோயா, மல்வத்து ஓயா, யான் ஓயா, மோதரகம ஆறு, கனகராயன் ஆறு, மீ ஓயா)* (03 *புள்ளிகள்*)

(ii) *மேல்வரும் விபரங்களோடு தொடர்புடைய நீர்ப்பாசனத் திட்டங்களின் பெயர்களை ஒழுங்குவரிசையில் தருக.*

*A* – *நகரத்தின் தேவைகளுக்காக நீரைப் பெற்றுக்கொள்வதற்கு அநுராதபுரத்தில் தேவநம்பியதீசன் கட்டிய குளம்*

*B* – *மகாவலி கங்கையின் திருப்பத்தைப் பயன்படுத்தி மகியங்கனையின் தென்பால் அமைக்கப்பட்ட அணைக்கட்டு*

*C* – *தெதுறு ஓயா மூலமாக மாகல்ல வாவிக்கு நீரேந்திச் செல்வதற்கு அமைக்கப்பட்ட கால்வாய்*

*D* – *அம்பன் கங்கை வழியாகப் பராக்கிரம சமுத்திரத்திற்கு நீரைப் பாய்ச்சுவதற்கு அமைக்கப்பட்ட அணைக்கட்டு* (04 *புள்ளிகள்*)

(iii) *புராதன கால நீர்ப்பாசனவியல் தொழினுட்பவியலாளர்கள் கால்வாய்களை அமைப்பதற்குப் பயன்படுத்திய தொழினுட்பத்தை* ***இரண்டு*** *உதாரணங்களுடன் விளக்குக.* (05 *புள்ளிகள்*)

(iv) *குளங்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் புராதன கால நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பவியலாளர்கள் கையாண்ட* ***மூன்று*** *விதங்களை விளக்குக.*

(06 *புள்ளிகள்*)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

3. (i) *A* - மல்வத்து ஓயா *B* - மோதரகம் ஆறு *C* - யான் ஓயா

**(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii) *A* - திசாவாவி *B* - மினிப்பே அணைக்கட்டு / மினிப்பே

*C* - ரிதிபெந்தி *D* - எலகர அணைக்கட்டு / எலகர **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)
- கால்வாய்களில் நீரின் வேகத்தைக் குறைப்பதற்காக கருங்கல்லினால் அத்திவாரம் அமைத்தல் மற்றும் சிறிய கற்றூண்களை கால்வாயின் உள்பகுதிகளில் இடையிடையே பொருத்துதல் (உ-ம் : எலகர கால்வாய்)
- கால்வாயின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக கருங்கல்லினால் வான் கதவை அமைத்தல்
- சுரங்கவழி நீர்ப்பாசன தொழினுட்பம்
  (உ-ம் : திசா வாவி நீரை ரன்மசு உயன பூங்காவிற்கும் குட்டம் பொய்கைக்கும் விநியோகித்தல்)
- நீண்ட தூரத்துக்கு நிலத்தின் மென்சாய்வை பயன்படுத்தி நீர் கொண்டு செல்லல்.
  (உ-ம் : கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு ஜயகங்கை கால்வாய் மூலம் 1 கி.மீற்றருக்கு 95 மில்லிமீற்றர் சாய்வு)
- வரட்சியின் போது குளங்களின் நீர் மட்டத்தைப் பேணுவதற்கு, ஆற்றின் நீரை கால்வாயினூடாக பல குளங்களுக்கு வழங்கியமை.
  (உ-ம்: எலகர கால்வாயின் மூலம் அம்பன் கங்கையிலிருந்து நீர் மின்னேரியா, கவுடுள்ள, கிரித்தலை, கந்தளாய் ஆகிய குளங்களுக்கு வழங்கியமை.) **(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv)
- இரு எச்சக் குன்றுகளின் பாறைச் சுவடுகளைப் பயன்படுத்தி குளக்கட்டை நிர்மாணித்தல்.
- அலைதாங்கி
- கலிங்கல் (மடைக்கதவு)
- கலிங்கல் தொட்டி
- சுருங்கை (வான் கதவு)
- உள்வான் கதவு
- சிறு குளங்கள் ஆகியவற்றின் தொழிற்பாடுகளின் விளக்கம்.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**3 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




62% த்தினர் 3 ஆம் வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 18 ஆகும்.
0 - 4 புள்ளி ஆயிடையில் 38%
5 - 9 புள்ளி ஆயிடையில் 39%
10 - 13 புள்ளி ஆயிடையில் 16%
14 - 18 புள்ளி ஆயிடையில் 7%
ஆனவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 14 அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் 7% ஆனவர்கள் ஆவர். 38% ஆன மாணவர்கள் 4 அல்லது அதை விடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினாவுக்குரிய பகுதிகள், உப பகுதிகள் 9 இல் இலகுதன்மை மிக உயர்வான உப பகுதி (iv) ஆவதோடு அதன் இலகுதன்மை 57% ஆகும். இலகுதன்மை மிகக் குறைவான உப பகுதி (ii) *D* ஆவதோடு அதன் இலகுதன்மை 8% ஆகும்.

நீர்வள நாகரிகத்தின் நீர்ப்பாசன விருத்தி பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரிசீலிப்பதற்கே இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளது. 3ஆம் வினாவைத் தெரிவு செய்தோர் 62% ஆனோராகும். இதில் ஆகக்கூடிய இலகுதன்மை (ii) *A* உபபகுதியும் (iv) ஆம் பகுதியுமாகும். அவை முறையே 52%உம் 57% உம் ஆகும். தேவநம்பியதீச மன்னன் பற்றிய செய்திகளை பல்வேறு ஊடகங்கள் வழியாக எப்போதும் பெறும் வாய்ப்பிருத்தல் இதற்குக் காரணமாகும்.

(ii) *C*, *D* உபபகுதிகளின் இலகுதன்மை குறைவாக இருப்பதுடன் அவை முறையே 15%, 8% உம் ஆகும். பாடநூலில் உள்ள விசேட விடயங்கள் பற்றி அதாவது ஆறுகள் அவை தொடர்பான அணைக்கட்டுகள், கால்வாய்கள், குளங்கள் என்பன பற்றிக் கவனம் செலுத்தப்படாமையால் அடைவு மட்டம் குறைவடைந்துள்ளது.

குளங்கள் பற்றிய மரபுவழி செய்திகளால் உருவான கதைகளை மாணவர் விரும்பும் விதத்தில் நடைமுறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், குளங்களின் மாதிரி உருவாக்கல் என்பன மாணவர்களின் அடைவை மேம்படுத்த முடியும். ஆறுகள் அவை தொடர்பான பிரதான அணைக்கட்டுகள், கால்வாய்கள் என்பவற்றை அட்டவணைப்படுத்தல் ஆறுகள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் என்பவற்றை இணைக்கும் பயிற்சிகள் வழங்குதல், புறவரிப்படத்தில் குறித்துப் பெயரிடுதல், நீர்ப்பாசனம் பற்றிய விடயங்கள் வெளிப்படுத்துவனவற்றை எடுத்துக்காட்டுதல் ஆகிய செயற்பாடுகளிலே மாணவர்களை ஈடுபடுத்துதலினூடாக அடைவினை மேம்படுத்திக் கொள்ளலாம்.

**வினா 4**

**தேர்ச்சி :** நீர்வள நாகரிக காலத்தில் இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் நிலவிய தொடர்புகளின் இயல்பு பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரிசீலித்தல்

**4.** (i) *பக்கத்திலுள்ள இலங்கைப் படத்தில் மூன்று துறைமுகங்கள் A, B, C எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களைச் சரியான ஒழுங்கில் தருக.* (03 *புள்ளிகள்*)

(ii) A - *அநுராதபுர, பொலநறுவைக் காலங்களில் இலங்கையுடன் வாணிபத் தொடர்புகளைக் கொண்டிருந்த* **இரண்டு** *நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.*

B - *இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட* **இரண்டு** *பொருள்களைக் குறிப்பிடுக.*

(04 *புள்ளிகள்*)

(iii) *நீரியல் நாகரிகக் காலத்தில் இலங்கை சர்வதேச வாணிபத்தின் ஒரு மையமாக வளர்ச்சியுற்றமையை* **இரண்டு** *காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.* (05 *புள்ளிகள்*)

(iv) A - *சமயம்,*

B - *கலைகள், கைப்பணி வேலைகள் ஆகியவை முற்காலத்தில் வெளிநாட்டுத் தொடர்புகளின் காரணமாக வளர்ச்சியடைந்தவாற்றை ஒவ்வொன்றுக்கும்* **இவ்விரண்டு** *உதாரணங்கள் தந்து விளக்குக.*

(06 *புள்ளிகள்*)




**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

4. (i) A - கோகர்ண / திருகோணமலை

B - மகாதித்த / மாந்தை / மாந்தோட்டம் / மன்னார்

C - கொடவாய **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii) A - இந்தியா, சீனா, அரேபியா, கிரேக்கம், உரோம், பாரசீகம் (பேசியா), பர்மா

B - பட்டுத்துணி, பீங்கான் பொருட்கள், குதிரைகள், நறுமணப் பொருட்கள், கம்பளம், செப்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் **(02 x 02 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ மேலைத்தேய கீழைத்தேய வர்த்தகப் பாதையில் அமைந்தமை
- ★ முக்கியமான வர்த்தகப் பொருட்கள் இங்கு காணப்பட்டமை (உ-ம்: யானைத்தந்தம், யானை, முத்து, இரத்தினம், சங்கு, கடலாமை ஓடு, பருத்தித்துணி)
- ★ இலங்கையைச் சுற்றி துறைமுகங்கள் காணப்பட்டமை (உ-ம் :ஊராத்தோட்டை, மகாதித்த, தேவநகரம், கொடவாய....)
- ★ இலங்கை பருவக்காற்று நகர்வு நீரோட்டப் பாதையில் அமைந்திருந்தமை.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) A - **சமயம்**
- ★ பௌத்த இந்து சமயங்கள் கிடைத்தமை
- ★ சமூகத்தில் பிக்கு, பிக்குணி உபாசக (பக்தன்), உபாசிகா (பக்தை) ஆகிய பிரிவினைகள் தோற்றம் பெற்றமை.
- ★ மகாயான, வைத்துல்யவாத சமய சிந்தனைகள் தோற்றம் பெற்றமை
- ★ பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமய செல்வாக்கு காணப்பட்டமை. (இந்து சமய நம்பிக்கைகளும் கோவில்களும் காணப்பட்டமை)

B - **கலைகள், கைப்பணி**
- ★ இந்திய கலைச் செல்வாக்கு காணப்பட்டமை (மௌரிய, குப்த, பல்லவ, சோழ, விஜயநகர் கலைப் பாரம்பரியங்கள் செல்வாக்கு செலுத்தப்பட்டமை)
- ★ குகை நிர்மாணங்கள்
- ★ செதுக்கல் கலை
- ★ சித்திரங்கள்
- ★ சிலைகள்
- ★ கட்டிடக்கலை
- ★ மொழியும் இலக்கியமும் (உ-ம் : பாளி, சமஸ்கிருதம், சிங்கள, தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன.)

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**4 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




வினா இலக்கம் 4 இனை ஏறத்தாழ 71% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 30%
5 - 9 புள்ளி ஆயிடையில் 35%
10 - 13 புள்ளி ஆயிடையில் 21%
14 - 18 புள்ளி ஆயிடையில் 14%

ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 14% மானோராவர். ஏறத்தாழ 30% மானோர் 4 அல்லது அதைவிடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் பகுதிகள் உபபகுதிகள் 8 இல் இலகுதன்மை மிக உயர்வான உப பகுதி (i) *A* ஆவதோடு அதன் இலகுதன்மை 85% ஆகும். இலகுதன்மை மிகக் குறைவான உப பகுதி (i) *C* ஆவதோடு அதன் இலகுதன்மை 25% ஆகும்.

நீர்வள நாகரிக காலத்தில் இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையே நிலவிய தொடர்புகளின் இயல்புகள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரிசீலனை செய்வதற்காக தயாரிக்கப்பட்ட இவ்வினாவை 71% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். 65% ஆனோர் 9 அல்லது அதிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (i) *A* , (ii) *A* ஆகிய பகுதிகளுக்கு முறையே 85% உம் 61% உம் ஆக கூடிய இலகுதன்மை காணப்படுகின்றது. திருகோணமலை வரலாற்று ரீதியில் பல நிகழ்வுகளுடன் தொடர்புடையதாயிருப்பதும் அண்மைக் காலங்களிலும் முக்கியத்துவம் பெற்ற இடமாகவும் காணப்படுவதே இலகுதன்மை கூடியதாக இருப்பதற்கான காரணமாகலாம். நீர்வள நாகரிக காலத்தில் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகள் கொண்டிருந்த நாடுகள் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களின்போதும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதால் உயர் மட்ட அடைவு அடையப்பட்டுள்ளது.

மிகக் குறைந்த இலகுதன்மை உடையனவாக (i) *C*, (ii) *B* ஆகிய உபபகுதிகள் உள்ளன. அவற்றின் இலகுதன்மை முறையே 25% உம் 39% உம் ஆகும். வரலாற்று இடங்கள் பற்றிய சரியான விளக்கமின்மையே இதற்கான காரணமாகும். இத்தகைய இலகு விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்தப்படாமையும், சொற்களின் கருத்துப் பற்றி கவனம் செலுத்தப்படாமையும் இதற்குக் காரணமாகக் குறிப்பிடலாம். இலங்கையின் வரலாற்றுச் சிறப்புடைய இறங்குதுறைகள் பற்றிய பல்வேறு தகவல்களைக் கீழ் வகுப்புக்களிலிருந்து கற்பதற்கு சந்தர்ப்பமளித்த போதும் ‘கொடவாய்’ இறங்குதுறை பற்றிய அறிவு போதுமானதாக இல்லை.

புராதன காலந்தொட்டு இன்றுவரை இலங்கையின் இறங்குதுறைகள் துறைமுகங்கள் ஆகியவற்றின் ஆக்கிரமிப்புக்கள், புலம்பெயர்வுகள் வர்த்தகம் ஆகிய பல்வேறு தொடர்புகள் இடம்பெற்ற விதத்தினைக் காட்டுகின்ற அட்டவணையைத் தயாரித்து காட்சிப்படுத்தல், உலகப் புறவரிப்படத்தின் துணையுடன் அனுராதபுரம், பொலன்னறுவைக் காலத்தில் வர்த்தகத் தொடர்கள் கொண்டிருந்த நாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டுதல், அந்த நாடுகளைப் பட்டியற்படுத்திக் காட்சிப்படுத்தல் என்பன நல்ல பெறுபேறுகளை அளிக்கக்கூடியனவாகும்.

அண்மைக்கால தகவல்களைத் துணையாகக் கொண்டு இந்த இறங்குதுறையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்குப் படங்களைப் பயன்படுத்துதல் முற்காலத்தில் இந்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன பற்றியும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட பொருட்கள் பற்றியும் பட்டியல் தயாரித்தல், ஏற்றுமதி இறக்குமதி என்னும் சொற்களின் கருத்தை மாணவர்க்குத் தெளிவுபடுத்துதல் என்பன பொருத்தமானவையாகும்.

**வினா 05**

**தேர்ச்சி :** போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் சுதேச ஆட்சியாளருடன் கொண்டிருந்த தொடர்பினை நுணுகி ஆய்வு செய்யும் ஆற்றலைப் பரிசீலித்தல்.

**5.** (i) *இந்து சமுத்திரத்தைச் சார்ந்துள்ள நாடுகளுடன் வாணிபம் செய்வதில் ஈடுபட்ட* **மூன்று** *ஐரோப்பிய தேசங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.* (03 புள்ளிகள்)

(ii) *A, B, C, D ஆகிய வரலாற்றுக் குறிப்புகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டவர்களிலிருந்து தெரிவுசெய்க.*

*A* - போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாகவிருந்த கோட்டையின் இறுதி அரசன்

*B* - போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது ஆட்சி புரிந்த யாழ்ப்பாண அரசன்

*C* - சீதாவாக்கை மாயாதுன்னைக்கு கடற்படை உதவி வழங்கிய கள்ளிக்கோட்டை அரசன்

*D* - கி.பி. 1602 இல் முதலாம் விமலதர்மசூரியனைச் சந்தித்த முதலாவது ஒல்லாந்த அதிகாரி

(ஏழாம் விஜயபாகு, சங்கிலி,சமோரின், யோறிஸ் வன் ஸ்பில்பேர்ஜன், பரராஜசேகரன், டொன்சுவான் தர்மபாலன், சீவோல்ட் டி வெர்ட்) (04 புள்ளிகள்)

(iii) *கோட்டை, யாழ்ப்பாணம் ஆகியவற்றில் போர்த்துக்கேயர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு ஏதுவாயிருந்த உள்நாட்டு அரசியல் தகராறுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு உதாரணத்துடன் விளக்குக.* (05 புள்ளிகள்)

(iv) "ஒல்லாந்தர்கள் எப்போதும் பொருளாதார நலன்களில் கவனம் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகும்" 1638, 1766 ஆகிய ஆண்டுகளின் உடன்படிக்கைகளிலுள்ள **ஒவ்வொரு** நிபந்தனையை அடிப்படையாக் கொண்டு இக்கூற்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

5. (i)
- ★ போர்த்துக்கல்
- ★ ஒல்லாந்து
- ★ பிரான்ஸ்
- ★ பிரித்தானியா

**(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
*A* - டொன் சுவான் தர்மபாலன்

*B* - பரராஜசேகரன்

*C* - சமோரின்

*D* - யோறிஸ் வன் ஸ்பில் பேர்ஜன்

**(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii) **கோட்டை**
- ★ 1521ல் விஜயபாகு கொலை
- ★ மாயாதுன்னைக்கும் 7ஆம் புவனேகபாகுவுக்கும் இடையிலான அதிகாரப் போட்டி

**யாழ்ப்பாணம்**
- ★ 1519ல் சங்கிலியினால் பரராஜசேகரன் கொல்லப்பட்டமை
- ★ பரராஜசேகரனின் மகன் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு போர்த்துக்கேயரின் உதவியை நாடியமை
- ★ சங்கிலியன் கத்தோலிக்க மதம் பரப்புவதற்கு உதவியதால் இந்து குருமார்களினதும், பொது மக்களினதும் பிரதானிகளினதும் எதிர்ப்பு
- ★ சங்கிலியனின் மகன் புவிராஜபண்டாரம் ஆட்சியை கைப்பற்றியமை.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) **1638 ஆம் ஆண்டு உடன்படிக்கை**
- ★ யுத்தத்திற்கான சகல செலவுகளையும் கண்டி மன்னன் ஏற்க வேண்டும்.
- ★ ஒல்லாந்தருக்கு வர்த்தக தனியுரிமையையும், துறைமுகங்களையும் தந்துதவ வேண்டும்.

**1766 ஆம் ஆண்டு உடன்படிக்கை**
- ★ கொழும்பு, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், கற்பிட்டி துறைமுகங்கள், ஒலலாந்தருக்கு வழங்கப்படல்.
- ★ கடற்கரையில் 4 மைல் (ஒரு கவ்வ) பிரதேசம் ஒல்லாந்தருக்கு வழங்கப்படல்
- ★ மலைநாட்டு வர்த்தகத்திற்கும், கறுவா புடைத்தலுக்கும் மரங்களை வெட்டிக் கொள்வதற்கும் ஒல்லாந்தருக்கு அனுமதி அளித்தல்.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**5 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




வினா இலக்கம் 5 இனை ஏறத்தாழ 39% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 35%
5 - 9 புள்ளி ஆயிடையில் 29%
10 - 13 புள்ளி ஆயிடையில் 17%
14 - 18 புள்ளி ஆயிடையில் 19%

ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 19% மானோராவர். ஏறத்தாழ 35% மானோர் 4 அல்லது அதைவிடக் குறைவான புள்ளி பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் பகுதிகள் உப பகுதிகள் 7 இல் இலகுதன்மை மிக உயர்வான உப பகுதி (ii) *D* ஆவதோடு அதன் இலகுதன்மை 77% ஆகும். இலகுதன்மை மிகக் குறைவான உப பகுதி (iv) ஆவதோடு அதன் இலகுதன்மை 39% ஆகும்.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் சுதேச ஆட்சியாளருடன் கொண்டிருந்த தொடர்புகளை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்தல் இவ்வினாவின் எதிர்பார்ப்பு ஆகும். இவ்வினாவை 39% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். இவர்களில் 10 புள்ளிகளுக்கு மேல் 36% ஆனோரே பெற்றுக்கொண்டுள்ளனர். 35% ஆனோர் 4 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைவாகவோ பெற்றுள்ளனர். இவ்வினாவுக்குரிய பகுதிகள், உபபகுதிகளான 5 இற்கும் இலகுதன்மை 59% இலிருந்து 77% வரையான பெறுமதியைப் பெற்றுள்ளன. பகுதி (i), பகுதி (ii) இன் *A, B, C, D* ஆகிய உபபகுதிகள் என்பவற்றின் இலகுதன்மை முறையே 75%, 61%, 69%, 59%, 77% ஆகும். இலங்கைக்கு வந்த ஐரோப்பிய இனத்தவர் பற்றி மாணவர் முன்னைய வகுப்புகளில் அறிந்திருந்தமையும் பகுதி (ii) இல் அடைப்புக் குறிக்குள் விடைகளைத் தெரிவுசெய்து எழுதும் வாய்ப்பிருந்தமையும் பகுதி (i), (ii) என்பவற்றை எழுதுவதற்குத் தேவையான அறிவு மாணவர்களிடம் காணப்பட்டமையும் கூடிய இலகுதன்மையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனலாம். மேலும் இந்நிகழ்வுகளுடன் தொடர்புடைய தகவல்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தலும் வகுப்பறையில் கலந்துரையாடலில் ஈடுபடுத்தலும் பொருத்தமானவையாகும்.

பகுதி (iii), பகுதி (iv) என்பவற்றின் இலகுதன்மை முறையே 42% உம் 39% ஆகும். குறைந்த இலகுதன்மை பெறுவதற்கான காரணம் விளக்கமளித்தலில் காணப்படும் குறைபாடுகளே என்பது மாணவர்களின் துலங்கல் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கைகளுக்குரிய ஆண்டுகளை நினைவில் வைத்திருக்க முடியாமையே பகுதி (iv) இன் அடைவு மட்டம் வீழ்ச்சியடையக் காரணமாகியது எனலாம். குறித்த ஆண்டுகளுடன் தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் குறித்துக் கொள்வதற்கு இடமளித்தல், மீண்டும் மீண்டும் அந்த உடன்படிக்கை தொடர்புறும் விதத்தில் பயிற்சிகளில் ஈடுபடுத்தல் என்பன மூலம் மாணவர்களுக்கு ஊக்கமளிக்க முடியும். உடன்படிக்கைகளுக்கு உரிய ஆண்டுகளைத் தேடியறிந்து பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான புதிர் வினாக்கள் போன்ற விநோத செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். இந்த இரு இனத்தவர்களினதும் செயற்பாடுகளை ஒப்பீடு செய்யும் சந்தர்ப்பங்கள், அவற்றைக் காட்சிப்படுத்தல் என்பவற்றின் மூலம் நினைவில் வைத்திருப்பதை இலகுவாக்கலாம். வேறு நூல்களில் காணப்படும் இது தொடர்பான பகுதிகளின் ஒளிப்படப் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்கி வினாக்களையும் விடைகளையும் தயாரிக்கும் படி செய்தல் நடைமுறைரீதியான ஒரு செயற்பாடாக அமையும்.

**வினா 06**

**தேர்ச்சி:** இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போது நடைபெற்ற அரசியல், பொருளாதார மாற்றங்களை ஆராயும் ஆற்றலைப் பரிசீலித்தல்.

**6.** (i) *எந்த அரசியலமைப்பின் கீழ் மேல்வரும் சீர்திருத்தங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டன என ஒழுங்குவரிசையில் எழுதுக.*

*A - நிறைவேற்று அதிகாரக்குழு முறை அமைக்கப்பட்டமை*

*B - இருசபை கொண்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டமை*

*C - இலங்கை குடியரசாகியமை* (03 *புள்ளிகள்*)

(ii) *பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கான* **இரண்டு** *காரணங்களைக் குறிப்பிடுக.* (04 *புள்ளிகள்*)

(iii) *கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்கள் மூலம் ஏற்பட்ட* **இரண்டு** *நிர்வாக மாற்றங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.* (05 *புள்ளிகள்*)

(iv) *பிரித்தானியர் அறிமுகப்படுத்திய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விளைவாக இந்நாட்டுப் பொருளாதாரத்திலேற்பட்ட* **மூன்று** *மாற்றங்களை உதாரணங்களுடன் விளக்குக.* (06 *புள்ளிகள்*)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

6. (i) *A* - 1931 ம் ஆண்டு டொனமூர் யாப்பு

*B* - 1947 ம் ஆண்டு சோல்பரி யாப்பு

*C* - 1972 ம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii) இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்

இலங்கையின் இயற்கைத் துறைமுகமான திருகோணமலை காணப்பட்டமை

கீழைத்தேய, மேலைத்தேய வர்த்தகப் பாதையின் மத்தியில் அமைந்தமை

இலங்கையில் காணப்பட்ட பெறுமதியான வர்த்தகப் பொருட்கள்

**(02 x 02 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ கரையோரப் பிரதேசத்தையும் மலைநாட்டையும் ஒரே ஆட்சி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தமை
- ★ 16 மாகாணங்களை 5 மாகாணங்களாக குறைத்தமை
- ★ சிவில் சேவையை மாற்றியமைத்து செலவு குறைக்கப்பட்டமை (ஓய்வூதியம் நீக்கம்)
- ★ கட்டாய இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை
- ★ அரச நிர்வாகத்துக்குத் தேவையான ஆளணியினரைப் பெறுவதற்காக ஆங்கிலக் கல்வி ஊக்குவிக்கப்பட்டமை

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv)
- ★ சுயதேவைப் பொருளாதாரம் வீழ்ச்சி
- ★ இரட்டைப் பொருளாதாரம் தோற்றம் (ஏற்றுமதி, இறக்குமதி)
- ★ வர்த்தகப் பயிர்செய்கையின் அறிமுகத்தால் உள்நாட்டுப் பயிர்ச்செய்கை வீழ்ச்சி
- ★ உட்கட்டமைப்பு வசதிகள் அதிகரித்தமை
- ★ புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகியமை. (வங்கி, காப்புறுதி, தொலைத்தொடர்பு)
- ★ போக்குவரத்து துறை வளர்ச்சி (பெருந்தெருக்கள், புகையிரதம்)
- ★ துறைமுக விருத்தி

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**6 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**

**வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்**




வினா இலக்கம் 6 இனை ஏறத்தாழ 42% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 27%
5 - 9 புள்ளி ஆயிடையில் 40%
10 - 13 புள்ளி ஆயிடையில் 18%
14 - 18 புள்ளி ஆயிடையில் 15%
ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 15% மானோராவர். ஏறத்தாழ 27% மானோர் 4 அல்லது அதைவிடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுகன்மை**




6 ஆம் வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளும்

இவ்வினாவின் பகுதிகள் உப பகுதிகள் 6 இல் இலகுதன்மை மிக உயர்வான பகுதி (ii) ஆவதோடு அதன் இலகுதன்மை 81% ஆகும். இலகுதன்மை மிகக் குறைவான உப பகுதி (i) *C* ஆவதோடு அதன் இலகுத்தன்மை 29% ஆகும்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின்போது நடைபெற்ற அரசியல், பொருளாதார மாற்றங்களை ஆராயும் ஆற்றலைப் பரிசீலிப்பதே இவ்வினாவாகும். 42% ஆனோர் இதைத் தெரிவு செய்திருந்தனர். இவ்வினாவைத் தெரிவு செய்தோரில் 67% ஆனோர் 9 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். இவ்வினாவின் பகுதி (ii) மட்டும் 81% இலகுதன்மையைக் காட்டியிருந்தது. இங்கு இலங்கையின் அமைவிட முக்கியத்துவம், நாட்டில் இருந்த வர்த்தகப் பொருட்கள் என்பன பற்றி மாணவர் நினைவில் நன்கு பதிந்திருந்தமை செல்வாக்கு செலுத்தியுள்ளது எனலாம். இங்கு இரண்டு விடயங்களே குறிப்பிடப்படவேண்டியிருந்ததால் மொத்தப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாய் அமைந்திருந்தது.

உபபகுதி (i) *A*, பகுதி (iv) என்பவற்றின் இலகுதன்மை 44% ஆயினும் இதனைத் திருப்தியான அடைவு மட்டம் எனக் கருத முடியும். ஒவ்வொரு அரசியல் யாப்பு சீர்திருத்தம் பற்றியும் தனித்தனியாக நினைவில் கொண்டிருக்க வேண்டிய ஆர்வமின்மை பகுதி (iv) இற்கு விளக்கமளிப்பதிலுள்ள குறைபாடுகள் என்பன குறைவான புள்ளிகளைப் பெறுவதில் செல்வாக்கு செலுத்தியுள்ளன. பகுதி (iii) இற்குரிய சீர்திருத்தத்தின் மூலமான நிர்வாக மாற்றங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இடர்ப்பட்டமையையும் காணக்கூடியதாயிருந்தது. இங்கு ‘நிர்வாகம்’ என்ற சொல்லின் கருத்து கவனத்தில் கொள்ளப்படவில்லை. இது போலவே விடயங்களை வகைப்படுத்தல் பற்றிய திறன் வெளிப்படுத்தப்படவில்லை. அரசியல், பொருளாதாரம், கலாசாரம் ஆகியவற்றை வேறுபடுத்தி இனம் காணுவதற்கு உரிய தலைப்புக்கான விடயங்களை அட்டவணைப்படுத்திக் காட்ட முடியும்.

அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் அனைத்தையும் ஒருமித்து அட்டவணைப்படுத்தி ஒப்பீட்டு ரீதியில் விடயங்களைக் கலந்துரையாடல், ஒவ்வொரு யாப்பினதும் சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதிமன்றம் என்பன பற்றித் தனித்தனியாக விடயங்களைக் கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் இலகுவாக விடயங்களை விளங்கிக் கொள்ள முடியும்.

## பகுதி III

**வினா 07**

**தேர்ச்சி :** வட இந்தியாவின் அரசியல், கலாசார அபிவிருத்தி பற்றி பகுப்பாய்வு செய்யும் ஆற்றலைப் பரிசீலித்தல்

**7.** (i) *A* - *அங்கஜனபதத்தை மகதம் கைப்பற்றியமை*
*B* - *கலிங்கம் மௌரியப் பேரரசினால் கைப்பற்றப்பட்டமை*
C - *வாஹ்லிகர்களைத் தோற்கடிப்பதன் மூலம் குப்தப் பேரரசின் ஆதிக்கம் இந்தியாவுக்கு வெளியே பரவியமை*
*A, B, C என்பவற்றில் சொல்லப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய அரசர்களின் பெயர்களை முறையே குறிப்பிடுக.* (03 *புள்ளிகள்*)

(ii) *D, E, F, G என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான கூற்றை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து ஒழுங்கில் எழுதுக.*
*D* - *சந்திரகுப்த மௌரியன் போர்புரிந்த வடமேற்கு இந்தியாவின் கிரேக்க அரசன்*
*E* - *அசோகச் சக்கரவர்த்தியின் இராசதானி*
*F* - *நான்காம் பௌத்த மாநாட்டிற்கு ஆதரவு புரிந்த குஷான மன்னன்*
*G* - *மேகதூதம், சாகுந்தலம், குமார சம்பவம் ஆகிய இலக்கியங்களின் ஆசிரியர்*
*(காளிதாசர், பாடலிபுத்திரம், தாம்ரலிப்தி, செலியூக்கஸ் நிக்கேற்றர், மகா அலெக்சாந்தர், கனிஷ்கன், வால்மீகி)* (04 *புள்ளிகள்*)

(iii) *அசோகச் சக்கரவர்த்தியின் பின்பு மௌரியப் பேரரசு தளர்ச்சியுற்றமைக்கு ஏதுவான* ***இரண்டு*** *காரணங்களை விளக்குக.* (05 *புள்ளிகள்*)

(iv) *குப்தர் காலக் கல்விமுறையின்* ***மூன்று*** *சிறப்பியல்புகளை விளக்குக.* (06 *புள்ளிகள்*)

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

7. (i) *A* - பிம்பிசாரன்
*B* - அசோக சக்கரவர்த்தி
*C* - இரண்டாம் சந்திர குப்தன் **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii) *D* - செலியூக்கஸ் நிக்கேற்றர்
*E* - பாடலிபுத்திரம்
*F* - கனிஷ்கன்
*G* - காளிதாசர் **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ வடமேற்காக வந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்பு
- ★ பிரதேச ஆட்சியாளர்களின் பலம் கூடியமை
- ★ அசோகனுக்கு பின் பரந்த பேரரசை நிர்வகிக்க ஆட்சியாளர் இல்லாமை
- ★ போரினால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி
- ★ அரச சபையினுக்குள் இருந்த உட்பூசல்

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv)
- ★ கல்வி பெறும் உரிமை சமூகத்தில் சில பிரிவினர்களுக்கு மட்டும் கிடைக்கப்பெற்றமை
- ★ கல்வி கற்பிக்கும் உரிமை பிராமணர்களுக்கு மட்டும் காணப்பட்டமை
- ★ பௌத்த ஆராமைக் கல்வி காணப்பட்டமை
- ★ பிராமணக் கல்வி குருகுலக் கல்வியாகக் காணப்பட்டமை
- ★ பௌத்த உயர் கல்வி நிலையங்களாக நாலந்த, வலஹி, தச்சிலா, விக்கரம சீலா போன்றவை காணப்பட்டமை
- ★ பரந்த விடயப்பரப்புடன் (கலைத்திட்டம்) கல்வியைப் பெறக்கூடியதாக இருந்தமை

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**7 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




வினா இலக்கம் 7 இனை ஏறத்தாழ 68% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 36%
5 - 9 புள்ளி ஆயிடையில் 31%
10 - 13 புள்ளி ஆயிடையில் 17%
14 - 18 புள்ளி ஆயிடையில் 16%
ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 16% மானோராவர். ஏறத்தாழ 36% மானோர் 4 அல்லது அதைவிடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா பகுதி உப பகுதிகள் 9 இனைக் கொண்டது. இலகுதன்மை மிக உயர்வான உப பகுதி (ii) *F* ஆவதோடு அதன் இலகுதன்மை 78% ஆகும். இலகுதன்மை மிகக் குறைவான உப பகுதி (i) *C* ஆவதோடு அதன் இலகுதன்மை 27% ஆகும்.

வட இந்தியாவின் அரசியல், கலாசார, அபிவிருத்தி பற்றி பகுப்பாய்வு முறையிலான ஆய்வுக்காக இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளது. 67% ஆனோர் இதனைத் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவுக்கு 9 புள்ளிகளுக்குமேல் 33% ஆனோர் பெற்றுள்ளனர். 67% ஆனோர் 9 உம், அதற்குக் குறைவானதுமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

(ii) *E*, (ii) *F*, (ii) *G* உபபகுதிகள் கூடிய இலகுதன்மைக் காட்டியுள்ளன. அவை முறையே 74%, 78%, 70% ஆகும். அடைப்புக்குறிக்குள் விடைகள் குறிப்பிடப்பட்டிருந்தமை சரியான விடையை இலகுவாகத் தேர்ந்தெடுக்க உதவியுள்ளது. உபபகுதி (ii) இன் வினா அமைக்கப்பட்டுள்ள விதம் இலகுவில் விடையெழுதக் கூடியதாயிருந்தது. ஒவ்வோர் அரசர் பற்றியும் சிறப்பான விடயங்களை அட்டவணைப்படுத்தி தினமும் பார்ப்பதற்கு இடமளித்தல், ஒவ்வோர் ஆட்சியாளரது வாழ்க்கைப் பண்புகள் வெளிப்படும் விதத்திலான நுண்மதிக்குழுக் கலந்துரையாடல் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தல், விடைகளைத் தெரிவுசெய்து எழுதும் பயிற்சிகளைப் பழக்குதல் என்பன நினைவு சக்தியை மேலும் விருத்தி செய்வதற்குத் துணைபுரியும்.

பகுதி (i) *C* உபபகுதி குறைந்த இலகுதன்மைக் கொண்ட பகுதியாவதோடு அது 27% ஆகும். இங்கு இந்தியாவின் குப்த ஆட்சியாளரைப் பற்றிய மிகச்சிறப்பான விடயங்கள் பற்றி போதுமான அளவு கவனம் செலுத்தப்படவில்லை. ஆட்சியாளர் தொடர்பான முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய அட்டைகள் தயாரித்து பொருத்துதல் செயற்பாடுகள் மூலம் அறிவை விருத்தி செய்ய முடியும்.

## வினா 08

**நோக்கம்:** மத்திய காலத்தில் ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் கால அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மாற்றங்கள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரிசீத்தல்.

**8.** *5 ஆம் நூற்றாண்டு முதல் மேற்கு ஐரோப்பாவில் இனக்குழுக்களின் படையெடுப்புகள் அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஏற்படுத்திய குழப்பங்களின் விளைவாகவே மானியமுறை தோற்றம் பெற்றது.*

(i) *9 ஆம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பா மீது படையெடுத்த* ***மூன்று*** *குழுக்களின் பெயர்களைக் குறிப்பிடுக.* (03 *புள்ளிகள்*)

(ii) *மத்தியகால ஐரோப்பாவின் மானியப் பொருளாதார முறையின் சிறப்பியல்புகள்* ***இரண்டினைக்*** *குறிப்பிடுக.* (04 *புள்ளிகள்*)

(iii) *ஐரோப்பாவிலே மானியமுறை சீர்குலைந்ததிற்கு ஏதுவான* ***இரண்டு*** *காரணங்களை விளக்குக.* (05 *புள்ளிகள்*)

(iv) *மறுமலர்ச்சிக் காலத்தில்*

*A* - *கலைகள்,*

*B* - *விஞ்ஞானம்*

*ஆகிய துறைகள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்ட வளர்ச்சிகளை* ***இவ்விரண்டு*** *உதாரணங்களுடன் விளக்குக.* (06 *புள்ளிகள்*)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

8. (i) வைகின், முஸ்லிம், ஹன் **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
- நிலத்துடன் பிணைக்கப்பட்ட பொருளாதார முறை
- அரசனுக்குச் சொந்தமான நிலம் பிரபுக்களால் பெறப்பட்டு, பண்ணை அடிமைகளுக்கு மானிய முறையில் வழங்கி பயிர்செய்யப்பட்டது.
- சுயதேவைப் பூர்த்தி பொருளாதார முறை நிலவியமை
- சிற்றளவில் கைத்தொழில்கள் காணப்பட்டமை. (உ-ம் : வெதுப்பகங்கள், வைன் வடிசாலைகள்)
- பண்டமாற்று முறையிலான வர்த்தகம் நிலவியமை
- விவசாயத்தில் நிலமாற்று முறையையும் பயிர் முறையையும் மேற்கொள்ளல்.

**(02 x 02 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ சிலுவை யுத்தம்
- ★ வர்த்தக விருத்தி
- ★ கொள்ளை நோய்
- ★ வணிக நகரங்களின் விருத்தி
- ★ பணப்புழக்கம் ஏற்பட்டமை
- ★ நிலத்தை அடிப்படையாகக் கொண்ட முறை மாற்றம்

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) *A* **கலைகள்**

- ★ கலைகள் ஆன்மிக தன்மையிலிருந்து லௌகீகத்துக்கு மாற்றமடைதல்
- ★ **இலக்கிய வளர்ச்சி** - தாந்தே, பொக்காஷியோ, பெட்ராக் பின்சிஸ் பேகன், தோமஸ் மூர், வில்லியம் ஷேக்ஸ்பியர், இராஸ்மச் ஆகியவர்களின் ஆக்கம்
- ★ **ஓவியக் கலையின் வளர்ச்சி**
  - லியனாடோ டாவின்ஸி - மொனாலிஸா, இறுதி இராப்போசனம்
  - மைக்கல் ஆஞ்சலோ - சிஸ்டைன் ஆலயப் பாவுகை ஓவியம்
  - ரபாயல்
- ★ **சிற்பக் கலையின் வளர்ச்சி**
  - மைக்கல் ஆஞ்சலோ - டேவிட், பியட்டா சிலைகள்
- ★ **கட்டடக் கலையின் வளர்ச்சி**
  - ரபாயல், மைக்கல் ஆஞ்சலோ (கோதிக் கலை மரபே கையாளப்பட்டது.)

*B* **விஞ்ஞானம்**

- ★ நிக்கலஸ் கொபர் நிகஸ் - கோளவடிவான புவியும் ஏனைய கோள்களும் சூரியனைச் சுற்றி வருதல்
- ★ ஜொஹன்னஸ் கெப்லர் - கோள்கள் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றிவருதல்
- ★ கலீலியோ கலீலி - தொலைபேசி
- ★ சேர் ஐஸாக் நியூட்டன் - ஈர்ப்பு விசை
- ★ வில்லியம் ஹார்வே - மனித உடலில் குருதிச் சுற்றோட்டம்
- ★ பெரசல்சஸ் - நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களும் அதற்கான சிகிச்சை முறைகளும்
- ★ ஜோஹன்னஸ் கூடன்பர்க் - அச்சியந்திரம் **(03 + 03 = 06 புள்ளிகள்)**

**8 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




வினா இலக்கம் 8 இனை ஏறத்தாழ 39% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 34%
5 - 9 புள்ளி ஆயிடையில் 27%
10 - 13 புள்ளி ஆசயிடையில் 19%
14 - 18 புள்ளி ஆயிடையில் 20%
ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 20% மானோராவர். ஏறத்தாழ 34% மானோர் 4 அல்லது அதைவிடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா பகுதிகள் உப பகுதிகள் 5 இனைக் கொண்டது. இலகுதன்மை மிக உயர்வான உப பகுதி (iv) *A* ஆவதோடு அதன் இலகுதன்மை 72% ஆகும். இலகுதன்மை மிகக் குறைவான உப பகுதி (i) ஆவதோடு அதன் இலகுதன்மை 33% ஆகும்.

இவ்வினா மத்தியகால மறுமலர்ச்சி காலத்தில் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மாற்றங்கள் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்கானதாகும். இவ்வினாவை 39% ஆனோர் மட்டும் தெரிவுசெய்திருந்தனர். 61% ஆனோர் 9 புள்ளிகளுக்கும் அதற்குக் குறைவாகவும் பெற்றிருந்தனர். (iv) A உபபகுதிக்கு 72% இலகுதன்மை பெற்றிருந்தது. குறித்த கலை ஆக்கங்கள் பற்றி வெவ்வேறு துறைகள் மூலமும் தகவல்கள் பெற்றுக்கொண்டமை மொனலிசா போன்ற பிரபல கலையாக்கங்களைக் காணக்கூடியதாயிருந்தமை என்பன இதற்குச் செல்வாக்கு செலுத்தியுள்ளது எனலாம். உலகப் புகழ்பெற்ற கலையாக்கங்கள் பற்றிய தகவல்களைப் பட்டியற்படுத்தல் ஓவியக் கண்காட்சிகளை ஒழுங்கமைத்தல் என்பன பொருத்தமானவை. குறைந்த இலகுதன்மையை (i) காட்டியுள்ளது. இது 33% ஆகும்.

ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட கோத்திரங்களின் ஆக்கிரமிப்பு பற்றிய கவனம் குறைவாக இருந்தமையால் ஆக்கிரமிப்பு மக்கள் குழுவின் பெயர் குறிக்க இடர்ப்பட்டுள்ளனர். ஐரோப்பா மீது ஆக்கிரமிப்பு நடத்திய மக்கள் குழுக்களின் பெயர்ப் பட்டியல் தயாரித்து அதனைக் கிரகித்துக் கொள்ளுதல் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்குப் பொருத்தமான வழியாகும்.

**வினா 09**

**நோக்கம்:** இந்தியாவில் பிரித்தானியர் பின்பற்றிய கொள்கைகள் அவற்றுக்கு எதிராகச் சுதேச தலைவர்கள் செயற்பட்ட விதம் என்பன பற்றிய விமர்சன ரீதியான விளக்கத்தைப் பரிசீலித்தல்.

**9.** *"பல்வேறு தடைகளை வென்று யப்பான் தற்போது உயர் மட்ட மேம்பாட்டை அடைந்துள்ளது."*

(i) *கீழே A, B, C ஆகியவற்றினால் காட்டப்படும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையை அடைப்புக் குறிகளினுள்ளே இருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.*

*A. யப்பானை இணைப்பதற்கும் அங்கு சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கும் அத்திவாரமிட்டவர்.*

*B. யப்பானின் மானிய முறைக் காலத்தில் சமூகத்தின் தாழ்மட்டத்திலிருந்து ரொக்குகாவா ஷோகுனேற் ஆட்சியின் கீழ் ஆட்சியாளர்களாகிய அமைந்த குழு*

*C. தற்கால யப்பான் பாராளுமன்றத்திற்கு வழங்கும் பெயர்*

*(நெபுனகா, யுவாங் - ஷி- காயி, சமுராயிகள், டைமியோர்கள், நெசற், டயற்)* (03 புள்ளிகள்)

(ii) *ரொக்குகாவா ஷோகுனேற்றுகளின் கீழ் யப்பானில் விவசாயம் தொடர்பாக ஏற்பட்ட **இரு** மாற்றங்களைக் குறிப்பிடுக.* (04 புள்ளிகள்)

(iii) *மெயிஜி ஆட்சிக் காலத்தில் யப்பான் ஒரு புதிய பொருளாதாரக் கோலத்திற்கு வழிப்படுத்தப்பட்ட விதத்தை **இரு** விடயங்களின் கீழ் விவரிக்க.* (05 புள்ளிகள்)

(iv) *யப்பான் ஆசிய நாடுகளில் அதன் அதிகாரத்தைப் பரவச் செய்த விதத்தை உதாரணங்கள் தந்து விளக்குக.* (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

9. (i) *A* - வாஸ்கொடகாமா
*B* - சுரேந்திரநாத் பனர்ஜி
*C* - சுபாஸ் சந்திரபோஸ் **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii) *A* - ஆங்கிலேயர் இந்தியாவின் பிரதேசங்களை இணைக்கும் போது வஞ்சமாகச் செயற்பட்டமை
- இந்தியத் தலைவர்களை மதியாமை
- பிரதேசங்களுக்கிடையிலான தொடர்பும் விழிப்புணர்வும் (புகையிரத, தந்தி, தபால் சேவையால்)
- பிரித்தானியர் மிஷனரிமார்கள் மதம் பரப்புவதற்கு உதவியமை
- இந்திய வளங்களை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லல்.
- பன்றி, பசு கொழுப்புக்கள் பூசப்பட்ட தோட்டங்கள் பற்றிய வதந்தி...

*B* - ஒழுங்கான திட்டமின்மை
- பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்மை
- ஒழுங்கான தலைமைத்துவம் இன்மை
- செல்வம், படைப்பலம் உடையவர்கள் ஆதரவு வழங்காமை
- பொதுக் குறிக்கோள் இன்மை
- பிரித்தானியரின் பொருளாதாரமும் படைப்பலமும் உயர் நிலையில் காணப்பட்டமை

**(02 + 02 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ ஆங்கிலேயர் பின்பற்றிய நிலவரிக் கொள்கை
- ★ அதிக நிலவரி விதிப்பதால் தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சி
- ★ தேசிய கைத்தொழில்களுக்கு அக்கறை காட்டாமை
- ★ இந்தியாவின் வளங்கள் தமது நாட்டுக்கு கொண்டு செல்லல்
- ★ ஊழியர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கி சுரண்டியமை
- ★ மக்களின் தேவைகள் கவனிக்கப்படாமை
- ★ மேல் நாட்டுக் கல்வி முறையின் கீழ் ஆங்கிலக் கல்வி கற்று பல இன மொழி மக்களிடையே ஒன்றிணைப்பு மூலம் ஏற்பட்ட சுதந்திர உணர்வு
- ★ உட்கட்டமைப்பு வசதியால் ஏற்பட்ட இந்திய ஒருமைப்பாடு
- ★ தொல்பொருள் ஆய்வுகள் மூலம் இந்தியாவின் பாரம்பரிய நாகரீகத்தின் மகிமை பற்றிய விழிப்புணர்வு.... **(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) ★ சத்தியாக்கிரகம் - இந்தியத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டபோது ஒன்றிணைந்த போராட்டம்
★ ஒத்துழையாமை இயக்கம் - வந்தேமாதரம் இயக்கம்
★ பிரித்தானிய பொருட்கள், பதவிகள், பட்டங்கள், பகிஷ்கரித்தல் இயக்கம்
★ கீழ்ப்படியாமை இயக்கம் (சிவில் சட்டத்தை மீறல்) தண்டி யாத்திரை
★ வெள்ளையனே வெளியேறு **(03 + 03 = 06 புள்ளிகள்)**

**9 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :**




வினா இலக்கம் 9 இனை ஏறத்தாழ 52% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 44%
5 - 9 புள்ளி ஆயிடையில் 26%
10 - 13 புள்ளி ஆயிடையில் 15%
14 - 18 புள்ளி ஆயிடையில் 15%
ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 15% மானோராவர். ஏறத்தாழ 44% மானோர் 4 அல்லது அதைவிடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் பகுதிகள் உப பகுதிகள் 6 இல் இலகுதன்மை மிக உயர்வான உப பகுதி (i) *A* ஆவதோடு அதன் இலகுதன்மை 82% ஆகும். இலகுதன்மை மிகக் குறைவான உப பகுதி (iii) ஆவதோடு அதன் இலகுதன்மை 34% ஆகும்.

இந்தியாவில் பிரித்தானியர் பின்பற்றிய கொள்கைகள், நடைமுறைகள் அவற்றுக்கு எதிராக இந்தியர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பன தொடர்பில் இவ்வினா அமைக்கப்பட்டுள்ளது. இவ்வினாவை 52% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். அடைவு மட்டம் 10 புள்ளிகளுக்கும் அதற்கு மேலாகவும் பெற்றோர் 30% மட்டும் ஆகும். 44% ஆனோர் 4 புள்ளிகளுக்கும் அதற்கும் குறைவாகவும் பெற்றுள்ளனர்.

(i) இன் *A*, *B* ஆகிய உபபிரிவுகளுக்கு முறையே 82%, 65% என அதிக இலகுதன்மை காட்டப்பட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ள விடைகளினுள்ளே தெரிவு செய்து எழுதுவதற்கு வசதியாக வினா அமைக்கப்பட்டிருந்தமை *A* இல் கேட்கப்பட்ட வஸ்கொடகாமா பற்றி சந்தர்ப்பங்கள் பலவற்றிலும் கலந்துரையாடப்பட்டமை ஆசிய நாடுகளிடையே இந்திய வரலாற்றில் கூடிய கவனம் செலுத்தப்பட்டமை என்பன இதற்குக் காரணங்கள் ஆகும். நாடுகாண் பயணங்கள் பற்றிய விடயங்களுக்கு மாணவரின் விருப்பு அதிகளவில் காணப்படுவதும் இதில் செல்வாக்கு செலுத்தியுள்ளது.

குறைந்த இலகுதன்மையை (i) *C* உபபிரிவும், பகுதி (iii) உம் காட்டுவதுடன் அவை முறையே 40% உம் 34% உம் ஆகும். மாணவர் துலங்கலினூடாக தனிநபர் தொடர்பான முக்கிய தகவல்கள் பற்றிய அறிவு குறைவாகக் காணப்படுவதுடன் இந்திய வரலாற்றுடன் தொடர்புடைய தனியாள்களின் பெயர்கள் பல காணப்படுவதும் அவற்றைத் தெரிவு செய்தலில் இடர்பட்டமையும் குறைந்த இலகுதன்மை பெறுவதற்குக் காரணங்களாகின்றன. பகுதி (iii) இல் பிரித்தானியரின் கொள்கை, தேசப்பற்று விருத்தியின் செல்வாக்கு பற்றிய விடயங்களை தொடர்புபடுத்தி முன்வைத்தல், விவரித்தல் என்பவற்றில் காணப்படும் குறைபாடுகள் ஆகியவை புள்ளிகள் குறைவடையக் காரணமாகின்றன. விடயங்களை வெவ்வேறாகக் கோவைப்படுத்தல், விடயங்களுக்கு இடையிலான தொடர்புகளைக் காட்டும் இரட்டைப் பதிவுக்குறிப்பேடு தயாரித்தல் அவற்றைப் பயன்படுத்தலினூடாக முழுமையைக் கட்டியெழுப்புதல், தனியாள்கள் அவர்களின் பணிகள் என்பவற்றை அட்டவணைப்படுத்தி தொடர்புபடுத்தல் விடயங்களை விவரிப்பதற்குப் பயிற்சிகள் வழங்குதல் என்பன நல்ல பெறுபேறுகளைத் தரும். தேசப்பற்று செயற்பாடுகளுடன் தொடர்புடைய தனியாள்களின் படங்களைக் காட்சிப்படுத்தலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**வினா 10**

**நோக்கம்:** டொகுகாவா காலம் முதல் இரண்டாம் உலக மகாயுத்தம் நிகழ்ந்த காலம் வரை யப்பான் எதிர்கொண்ட அரசியல், பொருளாதார செயற்பாடுகளை நுணுகி ஆராயும் ஆற்றலைப் பரிசீலித்தல்.

**10.** (i) தொகுகாவா காலத்தில் ஜப்பானுடன் வர்த்தக உடன்படிக்கைகளைக் கொண்டிருந்த **மூன்று** ஐரோப்பிய நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) *A, B, C, D* என்பவற்றில் தரப்பட்ட ஒவ்வொரு விபரங்களுடன் பொருந்துவனவற்றை அடைப்புக்குறியினுள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து முறையே எழுதுக.

*A* - மானிய கால ஜப்பானில் தொகுகாவா காலத்தில் கீழ்நிலைக்கு ஒதுக்கப்பட்ட மக்கள் குழுவினர்

*B* - மேஜி காலத்தில் ஜப்பானில் ஆட்சி நிலையமாகவிருந்தது

*C* - இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஜப்பான் சரணடைந்தமைப் பற்றிய உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட சமயத்தில் அணிசேரா நாடுகளின் பிரதிநிதியாக இருந்தவர்

*D* - சன்பிரான்சிஸ்கோ மகாநாட்டில் ஜப்பானுக்கு தண்டனை வழங்கக்கூடாதென்று மற்ற நாடுகளுக்கு ஆலோசனை வழங்கியவர்

(மக் ஆர்தர், சமுராய், ஈடோ, சேர் ஜோன் கொத்தலாவல, டயமியோஸ், ஜே. ஆர். ஜயவர்தன, கியோத்தோ, ஹரிஸ் ரவுன்சென்ட்) (04 புள்ளிகள்)

(iii) மேஜி காலத்தில் ஜப்பானில் ஏற்பட்ட கைத்தொழில் அபிவிருத்தியின் சிறப்பம்சங்கள் **இரண்டினை** விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஜப்பானுடைய பிரதேச வாரியான ஆதிக்கப் படர்ச்சியினை உதாரணங்களுடன் விளக்குக.

*A* - முதலாம் உலகப் போருக்கு முன்

*B* - இரண்டாம் உலகப் போரின்போது (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

10. i.
- போர்த்துக்கல்
- ஒல்லாந்து
- ஸ்பானியா
- பிரித்தானியா

**(1 x 3 = 03 புள்ளிகள்)**

ii.
*A* - சமுராய்
*B* - ஈடோ
*C* - மக் ஆத்தர்
*D* - ஜே.ஆர். ஜயவர்த்தன

**(1 x 4 = 04 புள்ளிகள்)**

iii.
- ★ பாரிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டமை (உ-ம் : “மிட்சுய் சீமேந்து, “மிட்சுபிசி” மோட்டார் வண்டி)
- ★ உற்பத்தி அளவு வேகமாக அதிகரித்தமை
- ★ நவீன தொழினுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்
- ★ புகையிரதப் பாதைகள், தொலைத்தொடர்புகள், தொலைபேசி, கப்பல் கட்டுதல் போன்ற பாரிய இயந்திர சாதனங்களின் உற்பத்தி
- ★ பாரிய கைத்தொழிலுக்கு அரசும், தனியாரும் உதவியமை
- ★ பாரிய தொழிற்சாலைகளை விட, சிறிய தொழிற்சாலைகள் கூடியளவில் காணப்பட்டமை.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

iv. A - முதலாம் உலகப் போருக்கு முன்
- ★ 1895 இல் யப்பான் சீனாவைத் தோற்கடித்து, சீனாவின் வசமிருந்த கொரியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றியது.
- ★ 1904 இல் யப்பான் - ரஷ்ய யுத்த முடிவில் ரஷ்யாவுக்கு சொந்தமான கசலின் தீவின் தென் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டமை
- ★ 1910 இல் ராஜதந்திரத் தொடர்புகள் மூலம் முழு கொரியாவையும் ஆக்கிரமித்துக்கொண்டது.

B - இரண்டாம் உலகப் போரின் போது

- ★ 1941இல் பேள் துறைமுகத்தின் மீது குண்டு வீசியது.
- ★ தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகியன கைப்பற்றப்பட்டமை
- ★ பர்மா, சுமத்திரா, யாவா, போர்ணியோ, பிலிப்பைன்ஸ் தீவுகள் கைப்பற்றப்பட்டமை
- ★ இலங்கையை கைப்பற்றுவதற்காகவும் குண்டு வீசப்பட்டது.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**10 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




வினா இலக்கம் 10 இனை ஏறத்தாழ 32% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 65%
5 - 9 புள்ளி ஆயிடையில் 27%
10 - 13 புள்ளி ஆயிடையில் 6%
14 - 18 புள்ளி ஆயிடையில் 2%

ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 2% மானோராவர். ஏறத்தாழ 65% மானோர் 4 அல்லது அதைவிடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் பகுதி உப பகுதிகள் 7இல் இலகுதன்மை மிக உயர்வான உப பகுதி (ii) *C* ஆவதோடு அதன் இலகுதன்மை 90% ஆகும். இலகுதன்மை மிகக் குறைவான உப பகுதி (iv) ஆவதோடு அதன் இலகுதன்மை 12% ஆகும்.

டொகுகாவா காலத்திலிருந்து இரண்டாம் உலக மகா யுத்தம் நிகழ்ந்த காலப்பகுதி வரை ஜப்பான் எதிர்கொண்ட அரசியல், பொருளாதார செயற்பாடுகளை நுணுகி ஆராய்வதற்காக இவ்வினா அமைக்கப்பட்டுள்ளது. இது எல்லா வினாக்களையும் விட மிகக் குறைவானோரால் தெரிவு செய்யப்பட்டதாகும். 32% மானோரே தெரிவு செய்திருந்தனர். இவர்களில் 9 புள்ளிகளையும் அதற்கும் குறைவான புள்ளிகளையும் பெற்றோர் 92% ஆகும். முழுமையாகப் பார்க்கும்போது இந்த அலகினை மாணவர் விரும்பாமையும் வெளிவாரித்தகவல்கள் பெறுவதற்கான மூலாதாரங்கள் குறைவாக இருத்தலுமே குறைந்த அளவினர் இதனைத் தெரிவு செய்தமைக்குக் காரணம் எனலாம். அதிக இலகுதன்மையை (ii) *C* உபபிரிவு காட்டுகின்றது. அது 90% ஆகும். போரின் பயங்கரம் மற்றும் அழிவுடன் போரின் முடிவில் அதிக கவனம் செலுத்தியதால் அந்த நிகழ்வும் தனியாள்களும் நினைவில் வைத்திருக்கக் காரணமானது. குறைவான இலகுதன்மை (iii), (iv) பகுதிகளுக்கானதாகும். அவை முறையே 16% உம் 12% உம் ஆகும். ஜப்பான், சீனா என்பன பற்றிய தகவல்கள் விருப்புக்குரியனவாக அமையாமை அடைவு மட்டம் குறைவடையக் காரணமானது எனலாம்.

இந்த நாடுகள் பற்றிய விடயங்களை கற்பிக்கும்போது கற்றல் உபகரணங்களாக படங்கள், பத்திரிகைகள், இறுவட்டு என்பவற்றை பயன்படுத்தி நினைவில் வைத்திருக்கக்கூடியவாறு கற்பித்தல், குறித்த ஆட்சிக்காலத்தின்போது பல்வேறு தனியாள்கள் தொடர்பான நிகழ்வுகள், உரிய நாடுகளுடன் தொடர்புபடுத்திப் பொருந்தும் பயிற்சிகள் செய்வித்தல், தனியாள் பற்றிக் குறு வினாக்கள் தயாரித்தல், தகவல் தேடியறிவதில் ஈடுபடுத்துதல், குறும்புத்தகம் தயாரிக்கச்செய்தல், விடயங்களை விவரித்து எழுதும் பயிற்சிகளில் ஈடுபடுத்தல் போன்றவற்றினூடாக அடைவு மட்டத்தை உயர்வடையச் செய்யலாம்.

### 2.2.3 II ஆம் வினாப்பத்திரத்திற்கு அளிக்கப்பட்ட விடைகள் தொடர்பான முழுமையான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும்




**பகுதி I**

முதலாம் வினா பகுதி I இற்குரியது என்பதுடன் அது கட்டாய வினாவகும். இவ்வினா (அ) (i), (ஆ) (i) இல் $A$, $C$ (ii), (iii) ஆம் பகுதிகள் இலங்கை வரலாற்றை அடக்கியதாகவும் (அ) (ii), (ஆ) (i) இல் $B$, $D$ என்பன உலக வரலாற்றை அடக்கியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்குரிய இலகுதன்மை இலங்கை வரலாற்றுக்கு 30% உம் உலக வரலாற்றுக்கு 12% உம் ஆகும்.

இலங்கை வரலாற்றை ஆதாரமாகக் கொண்ட வினாக்களில் அதிக இலகுதன்மை மகாவம்சம், பொலன்னறுவைக்கால கட்டிட நிர்மாணக்கலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வினாக்களுக்கே காட்டப்பட்டுள்ளது. இது மாணவர்களின் விருப்பத்துக்குரிய விடயங்களாக கொள்ளலாம். முழுமையாகப் பார்க்கும் போது புறவரிப்படத்தில் குறித்துப் பெயரிடல் நலிவான மட்டத்தில் உள்ளது. அது இலங்கை புறவரிப்படத்துக்கு 24% உம் உலகப்புறவரிப்படத்துக்கு 15% உம் ஆகவுள்ளது. அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கு படங்களை இனங்காண்பதற்கான குறுவினாக்களைத் தயாரிக்கச் செய்தல், தனிநபர்கள் அவர்கள் பற்றிய தகவல்கள் என்பவற்றைச் சேகரிக்கச் செய்தல் திருத்தமான நுட்பத்திறன்களைப் பயன்படுத்தி பௌதிக பண்புகளையும் கலாசார முக்கியத்துவம் பெற்ற இடங்களையும் புறவரிப்படங்களில் குறித்துப் பெயரிட்டு காட்சிப்படுத்துதல் பொருத்தமானதாகும். புறவரிப்படத்தில் குறித்துப் பெயரிடும் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதை எப்போதும் மேற்கொள்ளுதல் அவசியமாகும்.

## பகுதி II

இலங்கை வரலாற்றுக்குரிய பகுதி II இல் 5 வினாக்கள் உள்ளன. இவற்றுள் மூன்றுக்கு மட்டுமே விடை எழுதுதல் வேண்டும். வினாக்களைத் தெரிவு செய்த முறையில் 2 ஆம் வினாவை 83% ஆனோரும், 3 ஆம் வினாவை 62% ஆனோரும், 4 ஆம் வினாவை 71% ஆனோரும், 5 ஆம் வினாவை 39% ஆனோரும், 6 ஆம் வினாவை 42% ஆனோரும் காணப்படுகின்றனர். 2 ஆம் வினாவையே அதிகமானோர் தெரிவு செய்திருந்தனர். நீர்வள நாகரீகத்தின் அரசியல், பொருளாதாரம், கலாசாரம் ஆகிய துறைகள் பற்றி முன்னைய தரங்களிலும் அறிவைப் பெற்றிருந்தமை இதில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

இப்பகுதியில் 5 ஆம் வினாவையே ஆகக் குறைந்தளவினர் தெரிவு செய்திருந்தனர். அது 39% ஆகும். மேலைத்தேய இனத்தவரின் ஆட்சி பற்றிய தகவல்கள் போதியளவு கிரகித்துக் கொள்ளாமையே இவ்வினாவைத் தெரிவு செய்யாமைக்கான காரணமாகக் கொள்ளலாம் இதற்காக மேலைத்தேயவரின் நிர்வாக தகவல்கள், பல்வேறு இனத்தவர்களின் அரசியல், கலாசாரம், பொருளாதாரம் என வகைப்படுத்தி தகவல்களை வழங்குதல், கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பாத்திரமேற்று நடித்தல் போன்ற முறையியல்களைப் பயன்படுத்துதல், எண்ணக்கருப்படங்கள் மூலம் முழுமையைக் காண்பதற்கு ஒழுங்கமைத்தல் என்பன பொருத்தமானவையாகும். பாடநூல்களைப் பயன்படுத்துவதுடன் வெளிப்புற விடயங்களைத் தேடியறிவதிலும் ஈடுபடுத்துதல் வேண்டும்.

## பகுதி III

இப்பகுதி 4 வினாக்களைக் கொண்டது. வட இந்தியாவின் அரசியல் கலாசாரம் பற்றிய தகவல்கள், ஐரோப்பாவின் மத்திய காலமும் மறுமலர்ச்சிக் கால அரசியல் பொருளாதாரம் சமூகம் சார் மாற்றங்கள், இந்தியாவில் பிரித்தானியர் பின்பற்றிய கொள்கைகள், ஜப்பான் இரண்டாம் உலகப் போரின் போது எதிர் நோக்கிய அரசியல் பொருளாதார செயன்முறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதத்தைப் பார்க்கும் போது 7 ஆம் வினாவை 67% மானோர் தெரிவு செய்துள்ளனர். அவை இந்தியாவைப் பற்றித் தயாரிக்கப்பட்டதாகும். இந்தியா நமது நாட்டுடன் கொண்டிருந்த தொடர்பு காரணமாக இத்தலைப்பு மாணவரது விருப்புக்குரியதாக விளங்குகிறது. இதனாலேயே உயர்துலங்கலைக் காட்டியுள்ளது. ஐரோப்பிய வரலாறு ஜப்பான் என்பவற்றுடன் தொடர்புபட்ட வினாக்களுக்கு மாணவரின் துலங்கல் திருப்திகரமானவையாக அமையவில்லை.

ஜப்பானுடன் தொடர்புடைய வெளிவாரித் தகவல்களைப் பெறுவதிலுள்ள சிரமம் இதற்குக் காரணம் எனலாம். முழுமையாகப் பார்க்கும் போது இந்தியா தவிர்ந்த உலக வரலாறு பற்றிய தலைப்புகளுக்கு வெளிப்படுத்தப்பட்ட இலகுதன்மை திருப்திகரமானது அன்று. நாடுகள் பற்றிய அறிவை விருத்தி செய்வதற்கு வேறு நூல்களைப் பரிசீலிப்பதற்கு இடமளித்தல் சமகால தகவல்களை சேகரித்தல் குறும்புத்தகங்கள் தயாரித்தல் அந்த நாடுகளுடன் எமது நாடு தற்போது கொண்டுள்ள தொடர்பு என்பன பற்றி அறிவூட்டுதல் முதலிய செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடச் செய்தல் பலன் அளிப்பனவாகும்.

# பகுதி III

## 3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1. விடையளிக்கும் போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்

**பொது அறிவுறுத்தல்கள்**

✶ வினாப்பத்திரத்திலுள்ள அடிப்படை அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, கட்டாய வினாக்கள் யாவை, எவ்வளவு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு என்பவை பற்றிய விடயங்களைக் கவனத்தில் கொள்வதுடன் வினாக்களை நன்கு வாசித்துத் தெளிவான விளக்கம் பெற்ற பின்னர் விடையளிக்க வேண்டிய வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.

✶ முதலாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்தல் வேண்டும். பின்னர் தெளிவாக ஒரு புள்ளடி அடையாளத்தை இடுதல் வேண்டும்.

✶ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.

✶ திருத்தமான தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.

✶ சுட்டெண்களைத் தெளிவாக ஒவ்வொரு பக்கத்திலும் உரிய இடங்களில் எழுதுதல் வேண்டும்.

✶ வினா இலக்கத்தையும் பகுதி வினாக்களின் இலக்கங்களையும் உப பகுதி வினாக்களின் இலக்கங்களையும் தெளிவாக திருத்தமாக எழுதுதல் வேண்டும்.

✶ சுருக்கமாக விடை எழுத வேண்டியவைக்கு நீண்ட விடைகளும், விளக்கமாக விடை எழுத வேண்டியவைக்கு சுருக்கமான விடைகளும் எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும்

✶ வினாக்கள் கேட்கப்படும் விதத்துக்கேற்றவாறு தர்க்க ரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் விடயங்களை முன்வைத்தல் வேண்டும்.

✶ குறிப்பிட்ட வினா எண்ணிக்கைகளுக்கு மட்டும் உரிய நேரத்தில் விடை எழுதுவதுடன் மேலதிக விடைகளை எழுதுவதற்கு நேரத்தை ஒதுக்கக் கூடாது.

**விசேட அறிவுறுத்தல்கள்**

⋆ தேசப்படங்களில் குறித்துப் பெயரிடும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.
  - நகரங்களைக் குறிக்கும்போது மிகச் சரியான இடத்தில் புள்ளியிட்டுப் பெயரிடுதல்
  - இராச்சியங்கள், குளங்கள் என்பவற்றைக் குறிப்பிட உரிய பிரதேசத்தை நிழற்றிக் காட்டுதல்.
  - ஆறுகள் மலைகள் என்பவற்றை குறிப்பிடும்போது அவற்றை இனம்காணும் விதத்தில் பெயரிடுதல்.

⋆ கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமானவாறு விடைகளைத் தொகுத்து முன்வைத்தல்

⋆ விடயங்களைக் குறிப்பிடுதல் அவற்றை விளக்குதல், விவரித்தல், சான்றாதாரம் காட்டுதல் என்பவற்றுக்கேற்பவே வினாக்களுக்குரிய புள்ளிகள் வழங்கப்படுகின்றன என்பதை விளங்கிக் கொள்ளுதல்

⋆ கட்டமைப்பு வகை வினாக்களில் உதாரணங்கள், விடயங்கள் என்பவற்றை முன்வைத்தல் வேண்டும்.

⋆ உப தலைப்புகளுக்கான விடைகளைப் பந்தி பந்தியாக வேறுபடுத்தி எழுதுதல் வேண்டும்.

## 3.2. கற்றல் கற்பித்தல் செயன்முறை பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும்

★ **கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டு செயன்முறை என்பன மூலம் பெறுபேற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ள வேண்டியவை**

- கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தல்
- பாட செயற்பாடுகளை ஆர்வமூட்டும் வகையில் ஒழுங்கு செய்தல் (பாடப் பரப்புடன் தொடர்புடைய) திட்டமிட்ட களப்பயணங்களை ஒழுங்கமைத்தல்
- குறிப்பாக பாடநூல்களைக் கற்பதற்கு ஊக்கமளித்தல்
- மாணவரின் ஆக்கங்களை (பாடத்துடன் தொடர்புடைய) வகுப்பில் காட்சிப்படுத்தல். சுவர்ப் பத்திரிகை, சஞ்சிகைகள், புதிர்கள், குறுவினாக்கள் ஆகியவற்றை தயாரித்தல்
- வரலாறு பாடத்துக்கென அறை அல்லது ஒரு பகுதியை ஒதுக்கி அபிவிருத்தி செய்தல்
- திறந்த நூல் பரீட்சைகளில் ஈடுபடுத்தி விடயங்களைத் தேடியறியச் செய்தல்.
- திருத்தமான புறவரிப்படங்களைப் பயன்படுத்துதல், படங்களின் தொகுப்பு நூல் தயாரிக்கச் செய்தல்
- விடைகளை எழுதும் போது விடயங்களை ஒழுங்கமைத்தல் பயிற்சிகளைச் செய்வித்தல்
- கிராமம், பிரதேசம், நாடு என்பவற்றின் வரலாற்று இடங்கள் நிகழ்வுகள் என்பவற்றை மரபு வழிக் கதைகள் போன்றன மூலம் தேடியறிந்து தகவல்கள் சேகரிப்பதில் ஈடுபடுத்துதல்.
- தொலைக்காட்சி வானொலி செயதிப்பத்திரிகைகளின் கல்வி நிகழ்ச்சிகள் கலந்துரையாடல்கள் கட்டுரைகள் ஆகியன மூலம் தகவல்கள் சேகரிப்பதில் ஈடுபடுத்துதல்.
- பிரபல வரலாற்று அறிஞர்களின் உதவி பெறுதல்
- நுண்மதிக் குழுக் கலந்துரையாடல், பாடசாலையினுள்ளேயும் வேறு பாடசாலைகளுடனும் இணைந்து ஒழுங்கமைப்புகளை ஏற்படுத்துதல்